
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 1997



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00



ஜெர்மனிலுள்ள சுவெற்றா
அம்பிகை ஆலயத்தின் தோற்றம்
இது. இவ்வாலய கும்பாபிஷேகம்
சம்பந்தமான விவரணக் கட்டுரை
அடுத்த இதழில் இடம் பெறும்.

— ஆ — ர் —

ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர்: திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகப் பொறுப்பு: திரு வ.இ. இராமநாதன், துணை நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்
நிர்வாகக்குழு
திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு ந. சிவராசன்
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம், திரு சி. அற்புதானந்தன், திரு பொ. சுந்தரலிங்கம்

**KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford, IG5 0JD, England**
**Tel : 0181 550 4233**

மணி5 கலசம் ஒலி 17
தை - மாசி - பங்குனி 1997

# ஏன்?ஏன்?ஏன்?

நாம் இன்னும் குறுகிய வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? சின்ன ஒரு வட்டத்தைக் கீறிவிட்டு அதற்குள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறோம். ஆண்டவன் எங்கள் எல்லோரையும் விடப் பெரியவன் என்பதை மறந்து விடுகின்றோம். அகந்தை கொண்டு எத்தனை தவறுகள் தான் செய்கிறோம்.? ஆண்டவனை வழிபடுவதற்கே சட்டங்கள் இயற்றுகிறோம். ஈற்றில் ஆண்டவன்தான் அவற்றைச் செய்தான் என்று அவன்மேல் பழியும் போட்டுவிடுகிறோம்.

பெண்கள் தேர் வடம் பிடிக்கக்கூடாது என்று சட்டமியற்றுகிறோம்? ஏன்?

பெண்கள் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்கிறோம்? ஏன்?

பெண்கள் மயானத்தில் தேவாரம் பாடக்கூடாது என்கிறோம்? ஏன்?

ஆண்டவனுக்குப் பூசை சமஷ்கிருதத்தில் செய்யக் கூடாது தமிழிலேயே செய்யவேண்டும் என்கிறோம் . ஏன்?

சமஸ்கிருதம் ஆண்டவன் மொழி ஆதலால் தமிழ் வேண்டாம் சமஸ்கிருதமே வேண்டும் என்கிறோம். ஏன்?

ஒரு நாட்டில் ஆன்மீக யுத்தம் (அநியாயத்துக் கெதிரான யுத்தம்) நடைபெறும் போது சுயத்தைக் காப்பாற்ற நாங்கள் தேவாரம் மட்டும்தான் பாடுவோம் என்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறோம். ஏன்?

நான்... நான்... என்று நாவரளக் கத்திக் கத்தி மாய்கிறோமே ஏன்?

நம் உடன் பிறந்தவர்கள் வாழ்வில் அமைதி வேண்டி ஆலயத்தில் விசேட பூசைகளைச் செய்கின்ற நாம், ஆலயத்திற்கு வெளியே ஆணவம் பிடித்தவர்களாக அதே மக்களுக்கெதிராக செயற்படுகின்றோமே! ஏன்?

ஏன் இந்தத் துயரமான இரட்டை வேடம்? ஏன் இந்த அர்த்தமற்ற வாத விவாதங்கள்? இதனால் நாம் சாதிக்கப் போவது தான் என்ன?

ஆதியும் அந்தமும் இல்லாத அவன் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து அவனுக்கே சட்டமியற்றுகின்றோம்.

என்ன ஆணவம் எங்களுக்கு?

அவனே எல்லாம் என்றான பிறகு ஆணென்ன பெண்ணென்ன எல்லாமே ஆன்மாக்கள் தானே!

தமிழென்ன சமஸ்கிருதமென்ன- எல்லாமே ஆண்டவனுக்கு ஒன்றுதானே?

வாதவிவாதங்களை விட்டுவிடு. வா! வெளியே வா! நீ ஆண்டவனுள் அடக்கம் என்பதனை நம்பு! கொம்பு வைத்த மிருகங்களாக முட்டுவதற்காக அங்குமிங்கும் அலையாதே!

உன்னுடைய செயல்- வேகம்- அசைவு- முடிவு யாவும் எப்போதோ முடிந்த காரியம். இப்போ அவனை வழிபடு. அமைதிகொள்! ஆண்டவன் உன்னுள் வருவான்.


ஓம் நமசிவாய

ஆசிரியர்

# விம்பிள்டனில் ஐந்துமுக விநாயகர்

வந்திப்போர் வல்வினைபோம் வந்தணைவோர் வாழ்வுயரும்
சிந்திப்போர் சிந்தை தெளிவுபெறும் - விம்பிள்டன்
க்ஷேத்திரத்து நாயகனைச் சேவித்து எந்நாளும்
ஏற்றம் உறுவோம் இனி.

லண்டனிலே தென்மேற்கு மூலையில் உள்ள விம்பிள்டன் என்ற அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ கணபதி ஆலயம். இவ்வாலயத்திற் பல ஆண்டுகளாக இருந்து நமக்கெல்லாம் அருள் பாலித்துக்கொண்டு இருக்கிறார் சர்வ வல்லமை பொருந்திய விநாயகப் பெருமான். சென்ற நவம்பர் மாதம் இந்த ஆலயத்தில் ஒரு விசேடம் நடைபெற்றுள்ளது.



நவம்பர் மாதம் இருபத்து நான்காம் நாள் இந்த ஆலயத்தில் ஐந்து முகப் பிள்ளையாரோடு தக்ஷிணாமூர்த்தி, சிவலிங்கம், பைரவர், ராதா கிருஷ்ணர் ஆகிய திருவுருவச் சிலைகளைப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

விநாயக விரதம் ஆரம்பிப்பதற்கு முதல் நாள் இந்தப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்தின் சிவாசாரியர்கள் விழாவை முன்னின்று நடத்தினார்கள். தொடர்ந்து இருபத்தொரு தினங்களாக இலட்ச அர்ச்சனையும் விநாயக விரத வழிபாடும் இடம்பெற்றன. பல இடங்களிலிருந்தும் பக்தப் பெருமக்கள் வந்து தரிசித்து அருள்பெற்றனர். இருபத்தியோராம் நாள் விழா இனிது நிறைவேறியது. பிரதிஷ்டை செய்யப்பட்டதிருவுருவங்கள் அனைத்தும் தமிழ் நாட்டிலே கும்பகோணம் என்ற இடத்திலிருந்து தருவிக்கப் பட்டவை ஆகும். இவை கலைத் திறனும் அழகும் தெய்வீகக் களையும் ஒருங்கே மிளிரும் வண்ணம் பாங்குற அமைக்கப்பட்டிருப்பது இவற்றின் சிறப்பாகும். இவற்றை அமைத்த சிற்பிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

-ஞாலக்கோ-

# ஒலியும் படைப்பும்

## காஞ்சி பெரியவர்



சப்தம் என்பது என்ன? vibration தான் (அதிர்வுதான்) என்று இன்றைய ஸயன்ஸிற் சொல்கிறார்கள். அணு விஞ்ஞானமும், ஐன்ஸ்டீன் கொள்கையும் என்ன சொல்கின்றன என்றால்,"அணுவுக்குட் புகுந்து பார்த்தால் எல்லா வஸ்துவும் ஒன்று தான், அத்வைதம்தான். லோகமெல்லாம் ஒரே சக்தி வெள்ளம்தான். எல்லாம் ஒரே electro-magnetic (மின்- காந்த) பிரவாஹம்தான். ஆனால் ஏன் இப்படி வேறு வேறு வஸ்துகளாகத் தெரிகிறது என்றால், அந்த ஒரே சக்தியில் தோன்றுகிற வெவ்வேறு விதமான vibration களால்தான் என்று சொல்கின்றன.

அதிர்வு உண்டானால் சப்தம் உண்டாகிறது. இதையே திருப்பிச் சொன்னால், சப்தம் உண்டாக வேண்டுமானால் அதற்கான அதிர்வு ஏற்பட்டாக வேண்டும்.

ஒரே சக்தியில் பலவித vibrations ஏற்படுவதால் லோக சிருஷ்டி உண்டாவதாகச் சொல்கிற விஞ்ஞானக் கருத்தும், பரமாத்மாவின் சுவாஸமான வேத ஸப்தத்திலிருந்து லோகம் வந்தது என்பதும் முழுக்க ஒன்றேதான்.

மநுஷ்யர்கள், பிராணிகள் இருக்கிறோம். நம்முடைய ஆரோக்கியம், உணர்ச்சிகள் முதலியன எப்படி ஏற்படுகின்றன? நம்முடைய ச்வாஸ கதியிலிருந்துதான். நாடிகளில் ச்வாஸம் போகிறபோது ஏற்படுகிற vibration களால்தான் தேகத்தின் பல பகுதிகளுக்கும் ஆரோக்கியம் அல்லது ஆரோக்கியக் குறைவு ஏற்படுகிறது. யோக ஸாதனங்களால் ச்வாஸப் பயிற்சி மூலம் மூச்சை நாடிகளில் ஒழுங்கு படுத்திக் கொள்கிறவர்களுக்கு ஆச்சரியப் படும்படியான ஆரோக்கியம் இருக்கிறது. அவர்களுடைய ரத்தக் குழாய்களை நறுக்கினால் கூட ரத்தம் கொட்டாமல் இருக்கிறது. நாடித் துடிப்பு, ஹிருதயத் துடிப்பு இவற்றைக்கூட நிறுத்திவிட்டு, அவர்களால் பூமிக்கடியில் உயிரோடு ஸமாதியில் இருக்க முடிகிறது. பாம்பும் தேளும் கடித்தாலும் விஷம் அவர்களைப் பாதிப்பதில்லை. மூச்சினால் உண்டாகும் நாடி சலனத்தை அவர்கள் ஒழுங்குபடுத்தி இருப்பதால்தான் இப்படி இருக்கிறது.

உடம்புக்கு மட்டும் தான் மூச்சு முக்கியம் என்றில்லை. மனஸிற்கும் மனஸின் ஆரோக்கியத்திற்கும் அதுவே முக்கியமாகவிருக்கின்றது. எண்ணங்களுக்கு மூலமான மனஸும் மூச்சுக்கு மூலமான பிராணசக்தியும் ஒன்றாகவே இருப்பதால்தான் இப்படியிருக்கின்றது. நாடி சலனத்தாலேயே ஆரோக்கியமான (நல்ல)அல்லது ஆரோக்கியக் குறைவான (கெட்ட) எண்ணங்களும் உண்டாகின்றன. நீங்களே கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒரு தெய்வ ஸந்நிதானத்தில் அல்லது மஹானின் அருகில் மனது சாந்தமாக இருக்கிறபோது மூச்சு எப்படி சஞ்சரிக்கிறது, காமத்தினால் கோபத்தினால் வேகம் உண்டாகிறபோது சுவாசகதி எப்படியிருக்கிறது என்று பார்த்தால் ஒன்றுக்கொன்று நிரம்ப வித்தியாசமாயிருக்கும். ஸந்தோஷம் என்பதிலேயே கூட தெய்வ விஷயமாக ஒரு பஜனையில் அல்லது உத்ஸவத்தில் உண்டாகிறதற்கும் இந்திரிய ஸுகத்தைத் தருகிற விஷயங்களில் உண்டாவதற்கும் நாடி சலனத்தில் வித்யாஸம் தெரியும். பொதுவாக உத்தமமான ஸந்தோஷத்தில் மூச்சு வலது நாசித்துவாரத்தில் வரும். வெறும் இந்திரிய ஸந்தோஷம் (புலனின்பம்) என்றால் இடது நாசித் துவாரத்தில் வரும். இத்தனை உணர்ச்சிகளுக்கும் ஆதாரமான சாந்தமான ஸத்வஸ்துவில் தியானம் வலுவாகிற போது ஒரே சீராக மிக மெதுவாக இரு நாசிகளிலும் ஸமமாக மூச்சு வரும். தியான லக்ஷ்யத்தில் ஒன்றுபட்டுவிடுகின்றபோது மூச்சே நின்றுவிடும். மனஸும் நின்றுவிடும். ஆனால் உயிர் இருக்கும், ஞானம் என்ற பேருணர்வு பூரித்து இருக்கும். ஆக ஜீவன் என்று எடுத்துக்கொண்டால் அவனுடைய ஜடமான சரீரம் சைதன்யமான அறிவு இரண்டும் ச்வாஸகதியால் உண்டாகி வளர்கிறவைதான் அல்லது அழிகிறவை தான். முறையான ச்வாஸகதி என்பது நம் உள் vibration களை ஒழுங்கு பண்ணிக்கொள்வது தான்.

பரமாத்மாவிடமிருந்து தானே இத்தனை ஜட வஸ்துக்களும் சைதன்ய வஸ்துக்களும் தோன்றி விருத்தியாகின்றன. அழிவதும் வளர்வதுமாக இருக்கின்றன. இதற்கெல்லாம் ஏற்ற சலனங்கள் பரமாத்ம வஸ்துவில் ஏற்பட்டுத்தானே ஆகவேண்டும்?

பிரம்மம் நிர்குணமானது, சலனமற்றது என்கிற அத்வைதம் இருக்கட்டும். அந்த அத்வைதத்தின்படியும், இன்னதென்றே சொல்லமுடியாத (அநிர்வசனீயமான) மாயாசக்தியுடன் கூடி பிரம்மம் பலவான இந்தப் பிரபஞ்சமாக வேஷம் போட்டுக்கொண்டிருப்பதாகச் சொல்லித்தானே இருக்கிறது? வேஷமோ, கீஷமோ, இப்படி ஜடமான லோகமென்றும், சைதன்யமுள்ள ஜீவர்கள் என்றும் விவகார தசையில் இருக்கிற மாதிரி ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. மாயை என்று சொன்னாலும், அதற்கு ஆதாரமான "மாயின்" என்று ஈச்வரனேதான் இருக்கிறான். ஆகக்கூடி மாயாசக்தி என்று சொல்லிவிட்டாலும், இது அத்தனையும் பரப்பிரம்ம வஸ்துவில் தோன்றின சலனங்கள்தான், vibrations தான்! இத்தனை சலனங்களாலும் அது சலனமடையாமல், உள்ளூர நிர்குண சாந்த வஸ்துவாகவே இருக்கிறது. ஆனாலும் நம் பார்வையில் சலனங்கள் உண்டுதான். அதுவும் கன்னாபின்னா என்று இல்லாமல் பெரிய பெரிய சூரியன் முதலான கிரஹங்களின் ஸஞ்சாரத்திலிருந்து ஆரம்பித்து, ஒரு சின்ன புல், பூண்டு அல்லது கொசு உண்டாகிறவரை, எல்லாம் ஒரே மாதிரி நியதிப்படி, ஒழுங்குப்படி நடந்தவருகிறது.

லோக வாழ்க்கை க்ஷேமகரமாக நடக்க இந்த ஒழுங்குதான் ஒத்தாசை பண்ணுகிறது. இயற்கைச் சக்திகளை எல்லாம் ஒழுங்குபடுத்தித்தான் பரமாத்மா லோக வாழ்க்கையை உண்டாக்கியிருக்கிறார். ஆனாலும் இதிலே கொஞ்சம் கொஞ்சம் ஒழுங்கு தப்பிப் போகிறமாதிரியும் நடக்க விட்டு வேடிக்கை பார்க்கிறார்! வாழ்க்கைக்கு அநுகூலம் செய்யவேண்டிய இயற்கைச் சக்திகள் அப்படிச் செய்யாமல் இருக்கிறதையும் பார்க்கிறோம். காலத்தில் மழை பெய்யமாட்டேன் என்கிறது: அல்லது வெள்ளம் வருகிறது. வேறு ஏதாவது உத்பாதம் உண்டாகிறது.

ஒழுங்கு தப்பிப் போவதில் இந்த மநுஷ்ய மனஸ் இருக்கிறதே, அது எவ்வளவு தூரந்தான் போகும் என்றே சொல்ல முடியாமல், குட்டிச்சாத்தானாக அலைகிறது! பிரபஞ்ச வாழ்க்கை முழுவதிலும் எத்தனையோ ஒழுங்கு, கட்டுப்பாடு, நியதி இருந்தாலும், இந்த மனஸை எடுத்துக்கொண்டால், இது மட்டும் ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் வெறி நாயாகத் திரிகிறது.

இயற்கைச் சக்திகள் நமக்குப் பிரதிகூலமாக இருக்கிறபோது, அவற்றைச் சரிப்படுத்த வழியுண்டா? நம் மனஸைக் கன்னா பின்னா என்று விடாமல் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஏதாவது வழி இருக்கிறதா? சலனம் - சப்தம் இதனால்தான் சகல காரியமும் ஏற்பட்டிருக்கிறது என்றால், லோக சக்திகளை அநுகூலம் பண்ணித்தரவும், நம் சித்தத்தையே சுத்தம் பண்ணிக் கொடுக்கவும் கூட சப்தங்கள் இருக்கத்தானே வேண்டும். அவைதான் வேதம், வேதம் என்பது.

நம்முடைய ச்வாஸ கதியாலேயே, நாம் யோக மார்க்கத்தின் மூலம் பரமாத்மாவின் ச்வாஸத்தைப் பிடித்து, லோகோபகாரமாகவும், ஆத்ம க்ஷேமகரமாகவும் உள்ள காரியங்களை நடத்திக்கொள்ளலாம். இங்கே நாடி சலனம் இருந்தாலும் அது மநுஷ்ய காதுக்கு எட்டக்கூடிய சப்தமாக இருக்கவில்லை. ஸயன்ஸிலேயே மநுஷ்யனின் காதுக்கு எட்டமுடியாத ஸப்தங்கள், மநுஷ்யக் கண்ணின் லென்ஸூக்கு அகப்படாத ஒளி அலைகள் எல்லாம் உண்டு என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமில்லை. எட்ட முடியாததை நமக்கு எட்டுகிற மாதிரி மாற்றிக் கொடுக்கவும் முடிகிறது. ரேடியோவில் ஒருத்தன் பாடுகிறான் என்றால், முதலில் அவன் பாடுகிற சப்தங்களி மின்சார சக்தியினால் ஒருவிதமான காந்த அலைகளாக மாறிவிடுகின்றன. இப்படி மாறின அலைகள்தான் ஆகாசத்தில் விடப்படுகின்றன. அப்போது இவற்றை நம் காதாற் கேட்க முடிகிறதா? இல்லை. ஆனாலும் ரேடியோப் பெட்டியில் உள்ள கருவிகள் ஆகாசத்தில் இருக்கிற அந்த மின்சாரக் காந்த அலைகளைப் பிடித்து, மறுபடி நம் காதுக்கு எட்டுகிற மாதிரியே சப்த அலைகளாக்கிப் பாட்டாகக் கொடுக்கிறது.

இதைச் சொல்லும்போது விஞ்ஞானம் மதத்துக்கு விரோதியே இல்லை, மதத்தை வளர்க்க அதுவேதான் ரொம்ப ஒத்தாசை செய்கிறது என்று தோன்றுகிறது. ஒரு நூற்றாண்டுக்குமுன் டெலி:.போன், ரேடியோ ஆகியன வருவதற்கு முந்தி, "வேதசப்தமாவது, ச்வாஸமாவது?" என்று யாராவது நாஸ்திகர்கள் ஆக்ஷேபனை கிளப்பியிருந்தால், அவர்களுக்குப் பதில் சொல்லவே முடியாமல் இருந்திருக்கும். இப்போது இந்த ஸயன்ஸ் discoveries (கண்டுபிடிப்புகள்) தான் நமக்குக் கை கொடுக்கின்றன!

**இன்னும் வரும்.**

நன்றி: தெய்வத்தின் குரல்

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

# பிரம்மஞானமும் விஞ்ஞானமும்



வாழ்க வையகம்! வாழ்க வையகம்!! வாழ்க வளமுடன்!

குருவே துணை. சிந்தனையை, உடல் நலத்தை சீரமைத்து உய்வித்த குருவே வாழி! தனது சூக்கும உடலால் எங்கும் நிறைந்திருக்கின்ற எங்கள் ஆசான் அருட்தந்தை அவர்களே! இந்த முருகன் கோவிலின் அர்ச்சகர்கள் அவர்களே! இங்கு திரளாக வந்திருக்கின்ற பக்த கோடிப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

இறைவனைப் பார்த்து வள்ளலார் அவர்கள் பாடும்போது "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும், ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று கூறினவர், பாடலின்போது ஓரிடத்தில் ஒருமையுடன் நினது மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் என்பார். அதே போலவே நானும் இந்த முருகப் பெருமானின் அருளையும் அன்பையும் பெற்ற பக்தகோடிகளாகிய உங்களது அன்பையும் உறவையும் பெரிதாக மதிக்கிறேன். இங்கு ஒரு விஞ்ஞானக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக சென்ற வாரம் இலண்டன் வந்து சேர்ந்தேன். விஞ்ஞானக் கருத்தரங்கிற் கலந்துகொள்ள வந்த எனக்கு இது மாதிரியான ஓர் ஆன்மீகச் சொற்பொழிவுக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு, வாய்ப்புக் கொடுத்தவர்களுக்கு எனது நன்றி. இன்றைய நம் தலைப்பில் பிரம்ம ஞானமும் விஞ்ஞானமும் என்ற தலைப்பிற் சிறிது நேரம் சிந்திக்க இருக்கிறோம்.

பிரம்ம ஞானம் என்பது நமது இந்து சமயத்தின் ஒரு தலை சிறந்த ஞானம். சமயம் என்று நாம் சொல்லும்போது சமையல் என்ற சொல்லிலிருந்துதான் அது வந்திருக்கிறது. சமையல் என்பது பச்சைக் காய் கறிகளைப் பக்குவப்படுத்துவது. அதிலிருந்துதான் சமயம் என்ற சொல் வந்து மனிதனைப் பக்குவப்படுத்துவதற்காக வந்தது என்று சொல்ல வேண்டும். மனிதனிடம் மனம் என்ற ஒன்று இருக்கிறது. இந்த மனம் என்ற ஒன்றுதான் மனிதனை விலங்குகளிலிருந்து வித்தியாசப்படுத்துகிறது. இந்த மனதை எவன் இதமாக வைத்துக் கொள்ளுகிறானோ அவனே உண்மையான மனிதன் என்போம். அந்த மாதிரியாக மனதை நாம் இதமாக வைத்துக்

-டாக்டர் அழகர் ராமானுஜம்-
(அதிபர் நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி)

கொள்ளாவிட்டால் மனம் ஐம்புலன்களின் மேல் தனது ஆதிக்கத்தைச் செலுத்த மறுக்கும்போது புலன்களின் வழியே நம் வாழ்க்கை நின்று சீரழிவுக்கு அது வழி வகுக்கும். அப்படியல்லாது புலன்களை அடக்கி ஆளும்போதுதான், வலுவான மனம் இருக்கும்போதுதான் புலன்கள் மூலமாக நமக்கு நன்மைகள் வந்து சேரும். ஆக, புலன்களை மனம் கட்டுப்படுத்துகிறதா அல்லது மனதைப் புலன்கள் கட்டுப்படுத்துகிறதா என்பதைப் பொறுத்துத்தான் நமது வாழ்வு ஒரு மகானைப் போன்று சிறந்த வாழ்வாக அமைகிறதா அல்லது சாதாரண வாழ்வாக அமைகிறதா என்று சொல்ல முடியும். இதையே திருமூலர் ஓரிடத்தில் மிக அழகாகக் கூறுவார். அவர் கூறும்போது,

**பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்து**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாயின் வெறியும் அடங்கினால்**
**பாற்பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே**

என்பார். ஆக ஐம்புலன்களும் நமது கட்டுப்பாட்டை மீறிப் போகும்போது அதனால் நமக்கு எந்த விதமான பிரயோசனமும் கிடையாது. அது நமது கட்டுப்பாட்டுக்குள் வரும்போது பாலாய்ச் சொரிய ஆரம்பித்துவிடுகிறது. ஆக மனிதனைப் பக்குவப் படுத்துவதற்காக வந்தவைதான் மதங்கள். உலகில் பல கால கட்டங்களில் பல மகான்கள் வழியாக மதங்கள் தோன்றியிருக்கின்றன. பல மதங்கள் என்று நாங்கள் சொல்லும்போது மதம் என்று எடுத்துக்கொண்டாலே அதில் இரண்டு விதமான அம்சங்கள் உண்டு. ஒன்று இறை தத்துவத்தைப் பற்றியது. இன்னொன்று வாழ்க்கை நெறியைப் பற்றியது. இந்த இரண்டு அம்சங்கள் கொண்டதைத்தான் நாங்கள் மதம் என்று சொல்லுகிறோம். இந்த வாழ்க்கை நெறி என்று சொல்லும்போது எல்லா மதங்களும் ஒரே மாதிரியான நெறியைத்தான் சொல்லுகின்றன. ஏழைக்கு இரங்கு என்றுதான் எல்லா மதங்களும் கூறுகின்றன. அறம்செய விரும்பு என்றுதான் எல்லா மதங்களும் கூறுகின்றன. தாய் தந்தையர்தான் நமது தெய்வம் என்றுதான் எல்லா மதங்களும் கூறுகின்றன. ஆக வாழ்க்கை நெறியைப் பற்றி நாம் பார்க்கும்போது அநேகமாக எல்லா மதங்களும் கூறுவது ஒன்றுதான். ஆனால் இறை தத்துவத்திற்கு வரும்போது மதத்திற்கு மதம் நாம் வேறுபாட்டைக் காண்கிறோம்.

இறைவன் என்பது யார்?, இறை நிலையை நாம் எவ்வாறு அடையவேண்டும் என்ற கேள்விகளுக்கு நாம் விடை காணும்போது ஒவ்வொரு மதமும் உவ்வொரு விதமாகக் கூறுகிறது. ஆக அந்த ஆதி இறை நிலையைப்பற்றி பல மதங்களும் பலவாறாகக் கூறுகின்றன. அதுமட்டுமல்ல இலக்கிய வாதிகள் சிந்தனைவாதிகள் என்று பலதரப்பட்ட மக்களும் இதற்குப் பல விதமான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. இறைவன் என்று ஒருவன் இருக்கின்றான் என்று ஏன் நாம் முதலில் நம்பவேண்டும்? என்ற கேள்விக்கு வருகிறோம். ஏன் இறைவன் என்று ஒருத்தன் இருப்பதாக நாம் நினைக்கிறோம்? என்ற கேள்விக்கு வரும்போது, இந்தப் பிரபஞ்சத்தை நாம் எங்கு நோக்கினாலும் அதில் ஒரு நியதி இருக்கிறது. அதில் ஓர் ஒழுங்கும் இருக்கிறது. கோள்கள் அதனதன் பாதையில் ஒழுங்காகச் சூரியனைச் சுற்றி வருகின்றன. அந்த நியதிப்படி அவைகள் சுற்றி வராவிட்டால் இந்தச் சூரிய மண்டலம் என்ற ஓர் அமைப்பே ஏற்பட்டிருக்காது. பூமியைச் சுற்றிச் சந்திரன் இருபத்தியேழரை நாட்களுக்கு ஒரு முறை வருகிறது. அதே இருபத்தியேழரை நாட்கள் நமது பெண்மைக்கும் சார்புடையதாக அமைகிறது. ஆக நாம் எதைப் பார்த்தாலும் அதில் ஓர் ஒழுங்கும் ஒரு நியதியும் இருப்பதால் இந்த ஒழுங்கினைக் கொடுத்தது யார்? இந்த நியதிக்கு என்ன காரணம்? என்ற கேள்விகள் எழுகின்றன.

Since there is order in everything , the question arises that who has given this order? or who is responsible for this order? என்ற கேள்வி நம்முன் எழுகிறது. இதையே நாமக்கல் கவிஞர் அவர்கள் மிக அழகாகக் கூறுவார்கள்,

"சூரியன் வருவது யாராலே சந்திரன் திரிவது எவராலே காரிருள் வானில் மின்மினிபோல் கண்ணிற் படுவன அவையென்ன யாரிதற்கெல்லாம் அதிகாரி அதைநாம் எண்ணிட வேண்டாமா?" என்பார்கள். ஆக இந்தப் பிரபஞ்சம் முழுவதற்குமே இங்கு நிலவுகின்ற நியதிக்கும் ஒழுங்குக்கும் யார் அதிகாரி என்ற கேள்வி நம்முன் வருகிறது. இந்தக் கேள்வியைக் காலம் காலமாக பல மகான்களும் இலக்கியவாதிகளும் ரிஷிகளும் சிந்தித்திருக்கிறார்கள். திருவள்ளுவருக்கு நாம் வருவோம் ஆனால் அவர் குறளை ஆரம்பிக்கும்போதே,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

என்று ஆதி பகவன் முதற்றேதான் இந்த உலகு வந்ததென்று சுட்டிக் காட்டுவார். ஆதி பகவன் என்று கூறிய வள்ளுவர் மேற்கொண்டு அதற்கொரு உரிய விளக்கம் கொடுக்காமல் அதை அப்படியே நமது கற்பனா சக்திக்கு விட்டுவிடுகிறார்.

பின்பு கம்பரிடம் நாம் வருவோமானால், ராமாயணத்திற்குக் கம்பர் இறைவணக்கம் பாடவேண்டிய கட்டத்திற்கு வருகிறார். கம்பராமாயணம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அது ஒரு விஷ்ணு காவியம். ஆக விஷ்ணு காவியத்திற்கு விஷ்ணுவைப் பற்றிய ஒரு இறைவணக்கந்தான் பாட வேண்டும். ஆனால் கம்பரை ஆதரித்தவர்கள் எல்லோருமே சைவர்கள். ஆகவே விஷ்ணுவைப் பற்றிய இறைவணக்கம் எழுதினால் சைவர்கள் வருத்தப்படுவார்கள் என்பதால் அதை விஷ்ணுவைப் பற்றியதாக எழுதக் கம்பருக்கு மனம் இல்லை. ஆனாலும் காவியம் விஷ்ணுவைப் பற்றியே இருப்பதால் ஒரு சிவனைப் பற்றிய இறை வணக்கத்தை அவர் அங்கே எழுத முடியாது. ஆகவே இந்த இக்கட்டான சூழ்நிலையில் கம்பர் மிகச் சாதுரியமாகத் தப்பிக்கிறார். அவர் இறைவணக்கத்தை முதலில் ஆரம்பிக்கும்போது,

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகி லாவிளை யாட்டுடை யாரவர்**
**தலைவ ரன்னவற் கேசரண் நாங்களே.**

அவர் என்று வரும்போது சிவன் என்று சொல்வதா அல்லது விஷ்ணு என்று சொல்வதா என்னாமல் தலைவர் என்று கூறித் தப்பித்துக்கொள்கிறார். ஆக God is our leader என்ற கொள்கையை நாம் கம்பரிடம் பார்க்கிறோம். பின்பு வருகிற பாரதியாரிடம் பார்த்தோமானால் அவரிடம் சற்று விஞ்ஞான நோக்கு இருப்பதை நாம் அறிகிறோம். இப் பிரபஞ்சத்துக்குக் காரணமாக அமைந்தது எது என்ற கேள்வியைப் பாரதியார் தனக்குத் தானே எழுப்பிக்கொண்டு கூறுவார்,

**விரியும் வான் வெளியென நின்றனை அண்டகோடிகள் ஆயிரம் அமைத்தனை**
**அவற்றிடை எண்ணற்ற வேகம் சமைத்தனை**
**மண்டலத்தை அணு அணுவாக்கினால் வருவது எத்தனை**
**அத்தனை யோசனை கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை கோலமே**

என்று கூறியவர் இதற்கு என்ன காரணம் என்று கூற வரும்போது கோலமே நினைக் காளியென்று ஏற்றுவனே என்று அதை ஒரு மகாபராசக்தியாகக் காண்கிறார்.

ஆக பாரதியார் அவர்கள் மகா சக்தியாகவும் கம்பர் ஒரு தலைவராகவும் காணும்போது ஒரு சித்தர் பாடல் நம் மனதுக்கு நினைவு வருகிறது. சித்தர் பாடல் என்று நாம் சொல்லும்போது சித்தர்கள் எப்பொழுதுமே விஷயங்களை மேலெழுந்தவாரியாகக் கூறாமல் மறை பொருளாகவே கூறுவார்கள். ஒரு சித்தர் இந்தப் பிரபஞ்சத்தின் மூல கர்த்தாவாக யாரைக் காண்பது என்ற கேள்வி வரும்போது, உங்களுக்கெல்லாம் தெரிந்த பாடல்தான்.

**நந்தவனத்தில் ஓர்ஆண்டி அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி**
என்பார் அந்தச் சித்தர்.

ஆக நாலாறு மாதமாய் என்று சொல்லும்போது பத்து மாதங்கள். குயவனை வேண்டி எனும்போது இறைவனைக் குயவன் என்கிறார் அந்தச் சித்தர். ஆக அவ்வாறு அவர் குயவன் என்று கூறியதற்கு என்ன காரணம்? குயவன் என்றாலே நமது கிராமங்களில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். குயவனுடைய தொழில் படைப்புத் தொழில். பச்சை மண்ணிலிருந்து படைப்பை அவன் ஆரம்பிக்கிறான். ஆக ஆதி நிலையிலிருந்து அந்தப் படைப்பை அவன் ஆரம்பிப்பதால் அதை உருவகமாக்கி இறைவனைக் குயவன் என்று எழுதியிருக்கிறார் அந்தச் சித்தர். இன்னும் பார்த்தோமானால் குயவன் தனது படைப்புத் தொழிலை ஆரம்பிக்கும்போது அங்கு முதலில் அவன் செய்வது தன் சக்கரத்தைச் சுழல விடுவது. ஆகப் படைப்புக்கு ஆதாரமே சுழலும் சக்கரந்தான் என்பதை இன்றும்கூட நமது விஷ்ணுவின் கையில் இருக்கும் சக்கரம் மூலம் அறிவீர்கள். எங்கெல்லாம் படைப்புத் தொழில் இருக்கிறதோ அங்கெல்லாம் அதற்கு ஆதாரமாகச் சக்கரம் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் குயவன் என்று அவர் கூறியிருக்கிறார். இன்னும் அந்தப் பாடலைச் சற்று ஆராய்ந்து பார்த்தோமானால் குயவன் என்று நாம் சொல்லும்போது

அந்த மண் பாண்டங்களைச் செய்ததற்குப் பிறகு அந்தப் பச்சை மண் பாண்டங்களை அவன் சந்தைக்குக் கொண்டுவர மாட்டான். அந்தப் பச்சை மண் பாண்டங்களை வலு ஊட்டுவதற்காக அவன் தனியாக அதற்கென்று ஒரு சூளை அமைத்து சூளையில் அந்தப் பாத்திரங்களை அடுக்கித் தீ மூட்டி விடுவான். வானளாவிய அந்தத் தீயிலிருந்துதான் ஒவ்வொரு பாண்டமும் தனக்கு வேண்டிய சக்தியைப் பெற்றுக்கொள்ளும். அதே மாதிரியாகத்தான் நமது உடம்பையும் ஒரு தோண்டி என்கிறார் அந்தச் சித்தர். அப்படியென்றால் நாம் எந்தத் தீயிலிருந்து நமக்கு வேண்டிய சக்தியைப் பெற்றுக்கொண்டோம் என்ற கேள்விக்கு வரும்போது, நமக்கு வேண்டிய அந்தச் சக்தியை நாம் தாயின் சூலில் இருக்கும்போது தாயின் உடம்பிலுள்ள உஷ்ணத்திலிருந்து பெற்றுக்கொண்டோம். இங்கு ஒரு வார்த்தையை நாம் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். தோண்டி தனது சக்தியைப் பெறுவது சூளையிலிருந்து. நாம் நமக்குச் சக்தியைப் பெறுவது சூலிலிருந்து. ஆக இரு வார்த்தைகளிலும் ஓர் ஒற்றுமை இருப்பதை நாம் காண்கிறோம். தாயின் தீயிலிருந்துதான் நமக்கு ஆரம்பச் சக்தி வருகிறது. இதனால் பட்டினத்தார் தனது தாய் இறந்தவுடன். தனது தாய்க்கு ஈமைக் கடன்கள் செய்வதற்காக. காடெல்லாம் அலைந்து திரிந்தவர் வீடு திரும்புகிறார்கள். ஈமைச் சடங்கின்போது, தாயின் சடலத்தைப் படுக்க வைத்திருக்கிறார்கள். அதை மூன்று முறை வலம் வந்து தீயைப் பட்டினத்தார் இடவேண்டும். அப்படி வலம் வரும்போது ஞானியாகிய பட்டினத்தார் தனது தாயிடம் பேசுவார், அம்மா! இந்தத் தீயை உங்களுக்கு நினைவிருக்கிறதா? என்று கேட்பார். நான் அன்று உங்கள் அடி வயிற்றில் இருக்கும்போது நீங்கள் கொடுத்தீர்களே! அந்தத் தீ. அதையேதான் நான் உங்களுக்குத் திருப்பித் தருகிறேன் என்று மனம் உருகப் பாடுவார்.

**முன்னர் இட்டதீ முப்புரத்திலே**
**பின்னர் இட்டதீ தென்னிலங்கையில்**
**அன்னை இட்டதீ அடிவயிற்றிலே**
**யானும் இட்டதீ மூள்க மூள்கவே**

தீயிற்கு அவ்வளவு தாற்பரியம் இருப்பதாகப் பட்டினத்தார் அவர்கள் பாடுவார்கள். இத்தனையும் ஒட்டுமொத்தமாக வைத்த அந்தச் சித்தர் ஒரே வரியிற் கூறிவிட்டார்,

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி" என்று. ஆக அந்தச் சித்தர் ஆதி நிலையை ஒரு குயவன் என்று பார்க்கிறார். இவ்வாறு பலவாறாக பல காலகட்டங்களில் இறைவனைப் பார்த்தவர்கள் வெவ்வேறு வகையில் உருவகப் படுத்தியிருக்கிறார்கள். நாம் இன்று வாழ்வது ஒரு விஞ்ஞான உலகத்தில். ஆகவே விஞ்ஞான மூலமாக நமது இறைநிலைத் தத்துவத்தை நாம் அணுக முடியுமா என்பதுதான் நமது இன்றைய கேள்வி. விஞ்ஞான முறையாக இறை தத்துவத்தை அணுகும்போது அதற்கு நாம் காணும் விடை என்ன? என்பதைப் பார்க்கும் போதுதான் விஞ்ஞானமும் பிரம்மஞானமும் என்ற தலைப்புக்கு நாம் வருகிறோம்.

(தொடரும்.....)


# Prasad Sweets

புதிதாகத் தயாரிக்கப்பட்ட
காரமான-இனிப்பான
தின்பண்டங்கள்
99p/lb இலிருந்து கிடைக்கும்

**We Cater for all occations from only £1.60p per plate**

ALWAYS
FRESH & BEST

168 Upper Tooting Road
London SW 17
Telephone
0181 682 3363

222 Ealing Road
Wembly
Middlesex
Telephone
0181 902 1704

இம்முறை நவசக்திகளில் ஒருத்தியான வாமையானவள் சிவசக்தியை எழுப்புவதைப் பார்ப்போம். ஆரம்பத்திலே திருவெம்பாவையை நான் ஆரம்பிக்கும்போது நவசக்திகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். நவசக்திகள் என்றால் என்ன என்று பலர் ஐயம் எழுப்பியிருந்தனர். கன்னியர் நீராடலுக்காகச் செல்லும்போது மற்றைய கன்னியர்களை எழுப்புவதும் பின்பு எல்லோரும் சேர்ந்து இறைவனைப் புகழ்ந்து பாடுதலுமே திருவெம்பாவையின் அடிப்படையாகும். இவ்வாறு எழுப்புகின்ற செயலையும் பின்பு சக்திகள் சேர்ந்து இறைவனைப் புகழ்ந்து பாடுதலுமே திருவெம்பாவையின் அடிப்படையாகும். இவ்வாறு எழுப்புகின்ற செயலையும் பின்பு சேர்ந்து பாடுகின்ற தன்மையையும் நவசக்திகள் என்று குறிப்பிடுவர். இது ஒருவகையில் விஞ்ஞானக் கருத்தை அண்டி நிற்பதை நாம் அவதானிக்க வேண்டும். நவ சக்திகளாக மனோன்மணி, சர்வ பூத்தமணி, பெலப் பிரமதணி, பெலவி கரணி, காளி ரௌத் திரி, சேட்டை, வாமை, சிவசக்தி, ஆகியோர் கூறப் பட்டுள்ளார்கள். இங்கே சக்தி இன் னொரு சக்தியாக மாற்றப்படுகின்றது என்ற விஞ்ஞானத் தத்துவம் பொதிந் துள்ளதை அவதா னிக்க வேண்டும். ஒவ்வொரு சக்தி யையும் தனித்தனி யாகக் காட்டிய மாணிக்கவாசகர் ஈற்றில் எல்லாச் சக்திகளும் ஒன்று சேர்ந்து இறைசக்தியைப் பாடிப் பரவசமடைந்து ஐக்கியமாவதைத் துல்லியமாகக் காட்டியுள்ளார். இம்முறை மேலே நான் கூறிய சூழ்நிலைக்கான பாடல்களைக் கவனிப்போம்.



*கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்*
*எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்*
*கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை*
*கேழில்விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ*
*வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்*
*ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ*
*ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை*
*ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்*

இப்பாடல் வாமையானவள் சிவசக்தியை எழுப்புவதாக அமைந்துள்ளது. முதலில் சில கடினமான சொற்களைக் கவனிப்போம். சிலம்ப என்றால் ஒலிக்க என்றும் குருகு என்றாற் பறவைகள் என்றும் கேழில் என்றால் ஒப்பில்லாத என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது கோழி கூவ, பறவைகள் ஏழிசையில் வெண் சங்கோடு சேர்ந்து இசைக்க ஒப்பற்ற பரம்பொருளின் ஒப்பற்ற கருணையைப் பாடினோம். உனக்குக் கேட்கவில்லையா? அப்படி என்னதான் உறக்கம் உனக்கு? நான் இவ்வளவு சொல்லியும் இன்னும் வாய் திறந்து ஏன் பாடாது இருக்கின்றாய்? ஊழி முடித்தும் தனியனாக நிற்கின்ற ஏழைப் பங்காளனைப் பாடம்மா என்கின்றாள்.

இந்நிலையில் சிவசக்தியானவள் எழும்பிவிட நவசக்திகளும் ஒன்றாக நின்று இறைவன் புகழைப் பாட ஆரம்பிக்கின் றார்கள்.

## சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

மு. நற்குணதயாளன்

*முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!*
*உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்*
*உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எம் கணவர் ஆவர் அவர் உகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்*
*இன்னவகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்*
*என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்*

இங்கு போர்த்தும் என்றால் மீட்டும் எனவும் பாங்கு எனின் தோழமை என்றும் பொருள் கொள்ளலாம். பழையவற்றிற்கெல்லாம் பழையவனே, புதியவற்றிற்கெல்லாம் புதியவனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் உன் திருவடிக்கே சொந்தமானவர்கள். இன்று முதல் உன் அடியவர்களையும் நாம் வணங்குவோம். அவர்களே எம் கணவருமாவர். அவர்கள் விரும்பியவண்ணம் சொன்னவை செய்வோம் இறைவனே எங்களுக்கு ஏன் நீ இப்படி அருளக்கூடாது.....................

(இன்னும் வரும்...............)




# Radha Sarees



Exclusive & Elegant
Wedding Sarees, Wedding Langhas,
Banaras Silk Sarees, Choli Suits,
Japanese Sarees, Salvar Khamiz,
Jewellery

வாடிக்கையாளர்களுக்கு அன்பு நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

திருமணத்திற்கான பட்டுப்புடவைகள்
பனாரஸ் புடவைகள் சல்வார் கமிசுகள்
மற்றும் தங்க நகைகள் யாவும் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**279 Green Street**
**Forest Gate**
**London E7 8 LJ**

**Tel: 0181 472 8245**
**Fax: 0181 472 2369**

# ஐயன் கூற்றின் ஐயப்பாடு

## விமால்



இராம காதையில் ஒரு சுவையான சம்பவம். மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியன்று அது. மிகவும் வேதனை தரும் நிகழ்வே அது. யுத்த காண்டத்தில், இராவணனை வதம் செய்தபின் சீதாபிராட்டியை அழைத்துவருமாறு சொல்லி அவரை இராமபிரான் ஏற்றுக்கொள்ளும் காட்சியே இங்கு ஆராயப்படவுள்ளது. சீதையைத் தீக்குளிக்க வைத்துப் பின் இராமபிரான் ஏற்றுக்கொண்டது யாவரும் அறிந்த ஒரு நிகழ்ச்சியே. அக்கினிப் பிரவேசத்துக்கு முன்னும் பின்னும் இராமன் சீதையைப்பற்றிக் கூறிய கூற்றுக்கள் மிகுந்த சர்ச்சைக்குரியவையாக அமைந்துள்ளன.

சீதையை அழைத்து வருமாறு விபீடணனுக்கு இராமன் கட்டளையிடுகிறான். வாசனைத் திரவியம் பூண்டு, அணிகலன்களால் அலங்கரித்துச் சீதையைக் கூட்டிவரச் சொல்கிறான். விபீடணனும் சீதையிடம் இராமனின் விருப்பத்தைத் தெரிவிக்கிறான். சீதையோ அவ்வண்ணம் வர மறுத்து விபீடணனை நோக்கி,

"யான்இவண் இருந்த தன்மை இமையவர் குழுவும் எங்கள்
கோனுமம் முனிவர் தங்கள் கூட்டமும் குலத்துக் கேற்ற
வானுயர் கற்பின் மாதர் ஈட்டமும் காண்டல் மாட்சி
மேல்நிலை கோலம் கோடல் விழுமிய தன்று வீர!"
என்கிறாள்.

(வீரனே! நான் இங்கிருந்த தன்மையை வானவர் கூட்டமும் நம் தலைவனான இராமனும் அங்கு வருகின்ற முனிவரின் கூட்டமும் தம் குலத்திற்கேற்ற மிகச்சிறந்த கற்புடைய தேவமங்கையரின் கூட்டமும் காண்பது தகுதியானதாகும். இங்ஙனமேல் உன்னால் எண்ணிச் சொல்லப்பட்ட மேன்மையான அலங்காரத்தை யான் செய்வது சிறந்ததாகாது.)

ஆரம்பத்தில் மறுத்தாலும் இது இராமனின் கட்டளை என்று விபீடணன் விளக்கிச் சொன்னதும் சீதை

அலங்கரித்துவரச் சம்மதிக்கிறாள்.

எந்தச் சீதைக்காக இலங்காபுரிமேல் இராமன் போர் தொடுத்தானோ அந்தச் சீதை அருகில் வந்தபொழுது இன்முகத்துடன் இராமன் வரவேற்றானில்லை. மாறாகக் கடும் சொற்களால் அவளைக் கடிந்து கோபாவேசத்துடன் வரவேற்கிறான். அவன் அப்போது என்ன கூறினான் என்பதை வால்மீகி இராமாயணத்திற் பார்ப்போம்.

"பெண்ணே! உன் நடத்தையிற் களங்கமுள்ளது. உன்னைப் பார்க்க என் கண்கள் கூசுகின்றன. மாற்றான் வீட்டிற் பலகாலம் இருந்துவிட்டு வரும் மனைவியை எந்தவொரு கணவனும், குறிப்பாக நல்லகுலத்திற் பிறந்த எவனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். உன்னை எனக்கு வேண்டியதில்லை. நீ எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். பத்துத் திக்குகளில் எத்திக்கு நோக்கியும் நீ செல்லலாம். இராவணனைப் பற்றி நன்கு அறிந்தவன் நான். அவனோ கொடியவன். அப்படிப்பட்டவன் உன்னைத் தீண்டாமல் விட்டுவைத்திருப்பானா? நம்ப மாட்டேன் நீ எனக்கு வேண்டியதில்லை."

**ஊன்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட**
**மாண்டிலை முறைதிறம் பரக்கண் மாநகர்**
**ஆண்டுறைந்து அடங்கினை அச்சம் தீர்த்திவன்**
**மீண்டதென் நினைவெனை விரும்பும் என்பதோ**

(நீதி தவறிய அரக்கனின் பெரிய இலங்கை நகரமான அங்கு நெடுங்காலம் வாழ்ந்து அவன் கீழ் அடங்கியிருந்தாய். அங்கு அறுசுவை உள்ள உணவு வகைகளை விருப்புடன் உண்டாய். உன் நல்லொழுக்கம் பாழ்படவும் நீ இறந்தாயில்லை. இத்தகைய நீ அச்சம் இல்லாது இங்கு இப்போது மீண்டும் வந்தது எது கருதி? இராமன் என்னை விரும்புவான் என்று நின் எண்ணமோ?)

**மருந்தினும் இனிய மன்னுயிரின் வான் தசை**
**அருந்தினையே நறவு அமைய உண்டியே**
**இருந்தனைய இனி எமக்கும் ஏற்பன**
**விருந்துளவோ உரை வெறுமை நீங்கினாய்**

(என்னிடம் அன்பு நீங்கப்பெற்றவளே மிக்க உயிர்களின் மாமிசங்களை அமிழ்தத்தைவிட சுவை மிக்கதாக எண்ணி இலங்கையில் உண்டனையே மதுவை மிகுதியாகக் குடித்தாயே ன ஊனையும் மதுவையும் உண்டு இருந்தாய் அல்லையோ அத்தகைய இயல்புடைய நீ இனி எமக்குத் தகுதியாகச் செய்யும் விருந்துகளும் இருக்கின்றனவோ? சொல்வாயாக)

இவ்வாறு சொன்ன இராமனின் சொற்களைக் கேட்டதும் முனிவரும் வானவரும் மற்றும் நிறைந்த எண்ண இயலாத மிக்கபல மாதர்களும் அரக்கராக உற்ற அனைவரும் வானவர் எல்லோரும் மற்றும் கரடி முதலிய இனத்தில் சேர்ந்தவர்கள் எல்லோரும் வாய் திறந்து கதறினர்.

**முனைவரும் அமரரும் மற்றும் முற்றிய**
**நினைவரு மகளிரும் நீறதர் என்றுளர்**
**எனைவரும் வானரத்து எவரும் வேறுளர்**
**அனைவரும் வாய்திறந்து அரற்றினார் அரோ.**

இதன்பின் சீதை அக்கினிப்பிரவேசம் மேற்கொண்டு தூயவள் என அக்கினி தேவனால் நிருபிக்கப்பட்டு இராமனால் ஏற்றுக்கொள்ளப்பட்டாள்.

சீதையை ஏற்றுக்கொண்டபின் இராமன் அங்கு குழுமியிருந்தவர்களை நோக்கிக் கோருகின்றான். சீதையை நான் சந்தேகிக்கவில்லை. அவளுடைய நடத்தையில் எனக்கு ஒரு துளிகூடச் சந்தேகமில்லை. அவளின் கற்பின் வலிமையை நன்றாக உணர்ந்தவன் நான். சீதையின் கற்பிற்கு ஊறு விளைவிக்க இராவணன் முற்பட்டிருந்தால் கற்பெனும் தீயினால் அவனைச் சுட்டெரித்திருப்பாள் ஜானகி என்பது எனக்குத் தெரியாதா? இவ்வாறு புகழ்கின்றான் இராமன்.

சீதையைப் பற்றி முன்பு கொண்ட கருத்திற்கு எதிர்மறையான கருத்தை பின்பு தெரிவிக்கின்றான் இராமன். இப்படி முரண்பட்டு ஒரு சத்திய புருஷன் பேசலாமா? இரு கருத்துக்களும் சரியாக இருக்க முடியாது. ஒரு கூற்று உண்மையாக இருந்தால் மற்றது பொய்யாகத் தான் இருக்க வேண்டும். ஆக, பொய் சொன்ன குற்றத்திற்குத் தசரதகுமாரன் ஆளாகமாட்டானா? இப்படி ஒரு ஐயப்பாடு உருவாகத் தான் செய்யும். இந்த ஐயம் தீர வழிதான் என்ன? அன்றாடம் நடக்கும் சம்பவம் ஒன்றை எடுத்து ஆராய்ந்தாற் புரியும்.

"கண்ணே, மணியே, கற்கண்டே" எனக் குழந்தையைக் கொஞ்சிக் குலவும் ஒரு தாய் மறுகணம் குழந்தையின் விஷமத் தனம் பொறுக்க முடியாமல், "இந்த வானரம் எங்காவது தொலைந்து போனாற் தேவலை" என்று திட்டுவதைப் பார்த்திருக்கின்றோம். இவ்வாறு ஒரு

தாய் ஏசுவதாற் குழந்தையிடம் பாசம் இல்லையென்று அர்த்தமாகுமா? இது தாயின் ஆழ்ந்த பாசத்தால் வெளிப்படும் அன்புக் கண்டிப்பே தவிர இதற்கு உள்ளார்ந்த நோக்கம் யாதும் இல்லை.

இந்தக் கண்ணோட்டத்திலேதான் இராமனின் கூற்றுக்களை ஆராய வேண்டும். அவனின் முரண்பட்ட கருத்துக்கள் இருவேறு மனநிலையிலிருந்து வெளியிடப்பட்டவையே. இருவேறு உணர்ச்சிகளின் பிரதிபலிப்பே.

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅச்சொல்
ஒல்லை உணரப் படும்

வெளிப் பார்வைக்கு அயலார்போலக் கடுஞ்சொல் சொன்னாலும் மனத்தில் பகை இல்லாதவருடைய சொல் விரைவில் அறிந்துகொள்ளப்படும்.

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர் போன்றுற்றார் குறிப்பு

பின்னர் இனிதாகவும் முன்னர் இனிமை இல்லாததுமான சொல்லும் பகைவர் போற் பார்க்கும் பார்வையும், புறத்தே அயலார்போல் இருந்து அகத்தே அன்பு கொண்டவரின் குறிப்பாகும்.

இராமபிரான் மனிதனாகப் பிறந்து மனிதனுக்கே உரித்தான விருப்பு வெறுப்புகள் உணர்ச்சிகளைப் பிரதிபலித்து வாழ்ந்துகாட்டியவர் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

# சமய நம்பிக்கை

1. பதி, பசு, பாசம் கொண்டது இப்பிரபஞ்சம். ஆங்கிலத்தில் **God, Man, Cosmos** என்பர்
2. கடவுள் ஒருவரே. அவர் எங்கும் உள்ளவர். எல்லாம் அறிபவர். எல்லாம் வல்லவர். அருவமாயும் உருவமாயும் தோற்றம் தருபவர். பக்தர்கள் எந்த உருவத்தில் வழிபடுகிறார்களோ அந்தத் தோற்றத்தில் அவர்களுக்கு அருள் செய்வார்.
3. இறைவன் சிருஷ்டி கர்த்தர். பிரபஞ்சம் உருவாவதும் காக்கப்படுவதும் அழிவதும் சுற்று வட்டம். இது யுகம் யுகமாக தொடர்ந்து நடக்கின்றது.

*தொகுப்பு : கே. இராசேந்திரம்*

## குறித்து வைக்க வேண்டிய தினங்கள்

| | |
|---|---|
| 14-1-97 | தைப்பொங்கல் ஷஷ்டி விரதம் |
| 18-1-97 | கார்த்திகை விரதம் |
| 19-1-97 | ஏகாதசி விரதம் |
| 20-1-97 | பிரதோஷ விரதம் |
| 23-1-97 | தைப்பூசம், பூரணை விரதம் |
| 27-1-97 | சங்கடஹர சதுர்த்தி |
| 29-1-97 | ஷஷ்டி விரதம் |
| 03-2-97 | ஏகாதசி விரதம் |
| 05-2-97 | பிரதோஷ விரதம் |
| 07-2-97 | அமாவாசை விரதம் |
| 10-2-97 | சதுர்த்தி விரதம் |
| 12-2-97 | ஷஷ்டி விரதம் |
| 14-2-97 | கார்த்திகை விரதம் |
| 17-2-97 | ஏகாதசி விரதம் |
| 19-2-97 | பிரதோஷ விரதம் |
| 20-2-97 | நடேசர் விரதம் |
| 21-2-97 | பூரணை விரதம் |
| 22-2-97 | மாசி மகம் |
| 26-2-97 | சங்கடஹர சதுர்த்தி |
| 05-3-97 | ஏகாதசி விரதம் |
| 06-3-97 | பிரதோஷ விரதம் |
| 07-3-97 | மஹா சிவராத்திரி |
| 08-3-97 | அமாவாசை விரதம் |
| 12-3-97 | சதுர்த்தி விரதம் |
| 13-3-97 | கார்த்திகை விரதம் |
| 14-3-97 | ஷஷ்டி விரதம் |
| 17-3-97 | பங்குனித்திங்கள் |
| 19-3-97 | ஏகாதசி விரதம் |
| 21-3-97 | பிரதோஷ விரதம் |
| 23-3-97 | பூரணை விரதம் |
| 24-3-97 | பங்குனித் திங்கள் 2 |
| 27-3-97 | சங்கடஹர சதுர்த்தி |
| 31-3-97 | பங்குனித் திங்கள் 3 |
| 03-4-97 | ஏகாதசி விரதம் |
| 04-4-97 | பிரதோஷ விரதம் |
| 06-4-97 | அமாவாசை விரதம் |
| 07-4-97 | பங்குனித் திங்கள் 4 |
| 09-4-97 | சௌபாக்கிய கௌரி விரதம் |
| 10-4-97 | கார்த்திகை விரதம் |
| 12-4-97 | ஷஷ்டி விரதம் |
| 13-4-97 | ஈசுர வருடப்பிறப்பு |

**தொகுப்பு- அமுதா**

# Geeta Sarees

Specialists in Wedding Sarees, Printed Sarees, Woolen Shawls, Jewellery

231 Upper Tooting Road, London SW 17
(Nearest Tube: Tooting Broad way)

Tel: 0181 672 0208

வாடிக்கை
யாளர்களுக்கு
உளங்கனிந்த
பொங்கல்
வாழ்த்துக்கள்



அழகான கல்யாணப்
புடவைகளுக்கும்
சித்திரப்
புடவைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
நீங்கள் நாட
வேண்டிய
புடவை ஸ்தாபனம்

**zaverchand**
**Exclusive & Elegant**

| | | | |
|---|---|---|---|
| **822 London Road, Thornton Heath, Surrey** | **146 Ealing Road, Wembley Middlesex** | **166 Ealing Road, Wembley Middelesex** | **172 Ealing Road Wembley Middlesex** |
| Tel: 0181 689 5576 | Tel: 0181 903 1396 | Tel: 0181 903 5992 | Tel: 0181 903 5992 |

## (எமது தொடர் கட்டுரை)

4-7-1902 ஒரு மறக்கமுடியாத நாள். அன்று விவேகானந்தருக்கு வயது 39 வருடம் 5 மாதம் 24 நாள். அன்றைய தினமே தனது இறுதி நாள் என்று அவர் தெரிந்திருந்தார்.


காலையில் தியானத்திலிருந்து வெளியே வந்தபோது "இன்னுமொரு விவேகானந்தர் இருப்பின் விவேகானந்தர் என்ன செய்தார் என்பது புரியும். மேலும் எத்தனை விவேகானந்தர்கள் பிறப்பார்களோ?" என்று கூறினாராம். வழக்கமாகச் செய்யும் கடமைகளை செய்தவர் இரவு 9.00 மணிக்கு இம் மண்ணுலகின் தொடர்பை நீக்கிக் கொண்டார்.

## மகாத்மா காந்தி

**(1869-1948)**

20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற உலகத் தலைவர் அஹிம்சாமூர்த்தி, சத்தியத்தின் உறைவிடம் சேவையே சமயம் என்ற வாழ்க்கை நெறியை வகுத்துக் கொண்ட ஞானி, இந்தியாவின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்பட்டவர் காந்தியடிகள்.

காந்தியடிகள் 1969ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம்திகதி குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார். அவரின் இயற்பெயர் மோகனதாஸ் கரம்சந் காந்தி. தகப்பன் கரம்சந் காந்தி, தாய் புட்டலிபாய்.





# இந்து சமயம்

### க. குணரத்தினம்

அமெரிக்காவுக்குப் பயணம் செய்த நாள் தொடக்கம் இறுதி நாள் வரை ஒன்பது வருடங்களாக அவர் பெரும்பணி நடைபெற்றது. இந்து சமயத்தின் மறுமலாச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு மகத்தானது. தூங்கிக் கொண்டிருந்த இந்து மனச் சாட்சியை அவர் தட்டி எழுப்பினார். இந்து சமயச் சரித்திரத்தில் அழியாத உன்னத இடத்தைப் பெற்றது மல்லாமல் உலகரங்கில் இந்து சமயத்தின் மாட்சியையும் பெருமையையும் நிலை நாட்டினார்.

இந்தியாவில் இராமகிருஷ்ண விஜயம் என்ற பத்திரிகை தமிழிலும், பிரமித்த வேதாந்த கேசரி என்ற பத்திரிகை ஆங்கிலத்திலும் பிரசுரமாகின்றன. இவற்றின வாயிலாக இந்து மதத்தின் பெருமைகளை தத்துல தரிசனச் சிறப்புகளை உலகெங்கும் தெரியப்படுத்துகின்றன. விவேகானந்தர் ஆரம்பித்து வைத்த பணிகளை அவரின் சீடர் பரம்பரை இன்றும் தொடர்கிறது.

இருவரும் கடவுள் பக்தி நிறைந்தவர்கள். தந்தை ஒரு சிறிய அரசின் திவானாக (மந்திரி) இருந்தார். 14வயதில் காந்தியடிகளுக்கும் கஸ்தூரிபாய்க்கும் திருமணம் நடந்தேறியது. 1888 இல் தமது 19ஆவது வயதில் சட்டப்படிப்புக்காக லண்டனுக்குப் பயணமானார். தாயாரின் வேண்டுகோளின்படி லண்டனில் மாமிசம், மது, மங்கை என்பவற்றைத் தீண்டமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தார். அதைக்கடைப்பிடித்தார்.

பாடசாலையில் காந்தியடிகள் சாதாரணமான மாணவராகவே இருந்தார். சட்டப்படிப்பிலும் பிரகாசிக்கவில்லை. சிறுவயதில் அவர் படித்த அரிச்சந்திரன் கதையில் அரசனாக இருந்த அரிச்சந்திரன் தனது அரசு மனைவி மகன் எல்லாவற்றையும் இழந்து தாங்கொணா இன்னல்கள் ஏற்பட்டபோதும் கடைசிவரை சத்தியத்தை நிலை நிறுத்திய பாங்கு, அவர் மனதில் ஆழப்பதிந்திருந்தது.

சமயப் பற்றும் சமய அநுட்டானங்களும் நிரம்பிய பெற்றோரிடம் மிகவும் விசுவாசமாக இருந்தார். சமயப்பற்றும் சத்தியத்தின் வாய்மையும் காந்தியடிகளிடம் பயமில்லாத தன்மையைத் தோற்றுவித்ததோடு சாதாரண மனிதன் என்ற நிலையிலிருந்து அசாதாரண மனிதனாக மாற்றியது. காந்தியடிகளின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அவர் தமது சுய சரிதையை "சத்திய சோதனை" என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார். மற்ற எவரும் வெளியிட விரும்பாத அந்தரங்க விடயங்களை வெளிப்படையாகக் கூறியது மட்டுமல்லாமல் தமது சிறிய தவறுகளை இமாலயத் தவறுகள் என்றும் பெரிய சாதனைகளை மிகவும் சாதாரணமானவை என்றும் தெரிவித்துள்ளார்.

1891 இல் லண்டனிலிருந்து திரும்பி பம்பாயில் சட்டத் தொழிலை ஆரம்பித்தார். தொழிலில் தன்னம்பிக்கை குறைந்து ஓரளவு ஏமாற்றம் ஏற்பட்டது. 1893ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. சேத் அப்துல்லா என்ற ஒரு பெரிய வர்த்தகர் தமது வழக்கொன்றை நடத்தவதற்கு காந்தியடிகளை அழைத்தார். அழைப்பை ஏற்றுக் குடும்பத்துடன் தென்னாபிரிக்கா சென்றார்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் கறுத்த இன மக்களிடமும் இந்திய மக்களிடமும் கடைப்பிடித்த இன ஒதுக்கல் கொள்கைகளை நேரிற் கண்டார். பிழைப்புத் தேடிச் சென்ற தம் நாட்டு மக்கள் அல்லற்படுவதும் வெள்ளையர்கள் அவர்களை இழிவாக நடத்தும் கொடுமையும் அவரைச் சிந்திக்க வைத்தன. வெள்ளையரின் இனவெறிக்குக் காந்தியடிகளும் இலக்கானார். 1906இற் தென்னாபிரிக்க அரசாங்கம் அங்குள்ள இந்திய மக்களைக் குற்றவாளிகளுக்குச் சமமான நிலையில் வைத்து எண்ணும்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இனவெறி உச்சக்கட்டத்தை அடைந்தது.

காந்தியடிகள் அதற்கு எதிர்ப்பை உருவாக்கினார். இந்திய மக்களின் ஒத்துழைப்போடு போராட்டம் ஆரம்பமாகியது. இந்திய சமூகம் காந்தியடிகளின் தலைமையில் அணி திரண்டு நின்றது. காந்தியடிகளின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புகள் எல்லாம் அஹிம்சை முறையில் அமைந்தவை. இப் புதியமுறைப் போராட்டதுக்குக் காந்தியடிகள் வழங்கிய பெயர் சத்தியாக்கிரகம் இதன் பொருள் சத்தியத்தின் பேராற்றல் என்பதாகும். 1914 இற் போராட்டத்திற்கு வெற்றி கிட்டியது. தென்னாபிரிக்காவின் பிரதம மந்திரியாகவிருந்த ஜெனரல் ஸ்மட்ஸ் இந்தியர்களை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்த சட்டங்களை நீக்குவதற்கு ஒப்புக்கொண்டார். தென்னாபிரிக்காவிற் காந்தியடிகள் இருபது வருடங்கள் தங்கியிருந்தார். அவர் அங்கு பெற்ற அநுபவங்கள், உண்டாக்கிய அமைப்புக்கள், போராட்ட முறைகள் என்பன பின்னர் இந்தியாவில் அவருக்கு உதவின.

தென்னாபிரிக்காவிற் தமது இலட்சியம் ஈடேறியவுடன் ஒரு வெற்றிவாகை சூடிய மாவீரனாகக் காந்தியடிகள் இந்தியா திரும்பினார். இந்தியாவிற் தமது இலட்சியப் பணி என்னவென்று தெரிந்து வைத்திருந்தார். "இந்தியாவை ஆளப் பிரிட்டனுக்கு உரிமையில்லை. இந்தியர்கள் தென் ஆபிரிக்காவைப் போன்ற வெளிநாடுகளிற் துயர வாழ்வு நடத்துவதற்குக் காரணம் சொந்த மண்ணில் அவர்களுக்கு அரசியல் விடுதலை இல்லாமையே" என்றார். இந்தியா முழுவதும் ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு மக்களைச் சந்தித்தார். ஆளும் வர்க்கத்தாரிடமிருந்து ஆட்சியைப் பறிக்கத் தம் நாட்டு மக்களைத் தயார் செய்யும் பணியிற் கவனம் செலுத்தினார். இந்திய தேசிய காங்கிரஸுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்தார். 1915ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் மகாநாட்டில் வன்மையற்ற போராட்ட முறையெனும் ஆயுதத்தைப் பயன்படுத்திச் சுயராச்சியம் அடையலாம் என்று விளக்கினார். இளைஞர் பலர் அதை நம்ப மறுத்தனர். (இன்னும் வரும்......)

## சமய நம்பிக்கைகள்

கர்மவினை, மறுபிறவி, நம்பிக்கை.

ஒவ்வொரு செயலுக்கும் மறுதலிப்பு உண்டு. ஒவ்வொருவரும் தமது சுய கர்மங்கள் மூலம் தம் ஊழ்வினையைத் தேடிக் கொள்கிறார்கள். செய்யும் தொழில்கள் மறுபிறவியைத் தீர்மானிக்கின்றன. கர்மவினை தீரும்வரை ஒவ்வொரு ஆன்மாவுக்கும் பிறப்பும் இறப்பும் உண்டு.

தொகுப்பு: கே. இராசேந்திரம்




## சிறுவர் கலசம்

The following pages contain features and articles for children and by children. Hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We wish to know the views of children and parents on this matter.

**Editor**


# MEIPORUL NAYANAR

Meiporul Nayanar was a pious king. He ruled over the hill tribes of Sethi. He was chivalrous and brave. He fought many battles and was always victorious. There was peace and plenty in his kingdom. People worshipped him as the living God.

He was well versed in the Agamas. He was an ardent devotee of the Lord. To him Siva and His devotees, adorned with matted locks, Rudraksham and sacred ashes represented the only truth, Absolute Truth: and all the rest of the world was straw. He saw everything as Sivamayam. Siva Bhaktas enjoyed absolute freedom in his country: they were honoured by the king and the people alike. Though he ruled the kingdom as the king, his mind was always at the Lord's Feet. Daily, special prayers and festivals were conducted in the Temples in his realm.

Nayanar's fame soon spread far and wide. This evoked the jealousy of Muthanathan, the king of the neighbouring state. He collected a big army and attacked Nayanar several times; but he was repeatedly defeated. So, Muthanathan resorted to foul - play. One day, he disguised himself as a Siva Yogi (for he knew that Nayanar had supreme devotion to Siva Bhaktas) and entered the palace at night. The gate - keepers did not question him, but allowed him to proceed. Dathan, the faithful and

intelligent servant of Nayanar, was guarding the bedroom in which the king was sleeping. When the Siva Yogi approached the bedroom, Dathan tried to dissuade him from disturbing the king's sleep; but the Yogi refused to listen, saying, "I have some secret Shastra to teach the king. I cannot wait." So, Dathan had to allow the Yogi to enter the bedroom of the king, though he was a little suspicious. Nayanar's wife got up and, finding a Siva Yogi in the room, quickly awakened her husband. The Siva Yogi told the king that the Shastra was a great secret, revealed by the Lord Himself, and that only the king was entitled to hear it. At once the king sent even the queen away and prostrated before the Yogi, ready to receive the secret. At that moment, the Siva Yogi, who was none else than the jealous king Muthanathan, quickly stabbed Nayanar on his back, with a knife he had kept hidden. At that time, the shrewd Dathan, as he entered the room, found the king on the floor in a pool of blood and Muthanathan with a knife in his hand. He was ready to strike down Muthanathan, when the dying Nayanar said, "Datha, he is our man. He has the appearance of a Siva Yogi and so must be honoured as one. Do not harm him. Kindly escort him to the borders of our kingdom, and see that he is unharmed." Dathan obeyed the commands of his master. As he was escorting Muthanathan, the people who had heard what happened went to attack Muthanathan, but, as soon as Dathan told them of the king's commands, they withdrew, admiring the supreme devotion of their king. Thus, Muthanathan was safely escorted out of the kingdom. And, Dathan hastened back to the palace to convey this news to the dying king who was eagerly waiting for it.



As soon as Dathan conveyed the news to the king, the Nayanar called all his Ministers and relatives to his bedside, and spoke to them as follows, "It is our duty to serve the Bhaktas. They must be honoured and worshipped at all times and under all circumstances. Let our people walk in the footsteps of the Siva Bhaktas. Let the country be flooded with Siva Bhaktas. By their blessings, let peace and prosperity reign in our land." With these words, he closed his eyes and meditated on Lord Siva.

Lord Siva at once appeared before him and blessed him as follows, "I am immensely pleased with your devotion to My Bhaktas. I am immensely pleased with your cosmic love and your unquestioning devotion to My devotees. Even in a murderer you saw Me. You are, therefore, fit to reach the Highest Abode which even the Devas cannot hope to reach. You will soon come to My Abode." With these words the Lord disappeared: and Meiporul Nayanar (whose very name meant 'one for whom God was the sole reality') also attained His Abode.

# What is the fulfilment of a marriage?

## Sloga

**Children are the greatest source of happiness in marriage. Householder life is made rich and complete when sons and daughters are born, at which time the marriage becomes a family and a new generation begins. Aum.**


The total fulfilment of the grihastha dharma is children. Marriage remains incomplete until the first child is born or adopted. The birth of the first child cements the family together. At the birth itself, the community of guardian devas of the husband, wife and child are eminently present. Their collective vibration showers blessings upon the home, making of it a full place, a warm place. It is the duty of the husband and wife to become father and mother. This process begins prior to conception with prayer, meditation and a conscious desire to bring a high soul into human birth and continues with providing the best possible conditions for its upbringing. Raising several children rewards the parents and their offspring as well. Large families are more cohesive, more stable, and are encouraged within the limits of the family's ability to care for them. Parents, along with all members of the extended family, are responsible to nurture the future generation through childhood into puberty and adulthood. The vedas exclaim, " Blessed with sons and daughters, may they enjoy their full extent of life, decked with ornaments of gold"


Aum Nama sivaya


# SRI RAMAKRISHNAR

Sri Ramakrishna Parahamsa , the Messiah of undivided Bengal, the Prophet of Dakshineshwar, was both a phenomenon and an institution. His life and work, so mysterious and so sublime has been a landmark of the last century. During his life time his fame was confined to Bengal alone, but later he became a well known spritual giant throughout the wide world. His brilliant and extraordinary disciples and monks spread his teachings and message to all corners of the globe. The message of Ramakrishna is as relevant today as it has ever been in the past. If it is practised and preached sincerely most of our present day evils and problems would disappear automatically. This biographical tract is more or less a compilation. I hope it would inspire the youngsters to go for the Master's detailed biographies which are a great source of spritual pleasure, enlightenment and profit.

## Continuation from last Kalasam.........




After some days another monk came there by name Totapuri. He was An adept in the vedantic type of meditation. He had mastered it by a long practice of 40 years. He was attracted to Sri Ramakrishna and felt that he was a fit student to be taught the practice of advaita.
Are you willing to learn Monistic meditation from Me?
What do I know? Let me ask the permission of my mother?
Totapuri thought that as Sri Ramakrishna's mother was staying there he wanted to get her permission.
Ramakrishna ran to the shrine to get the Divine Mother's permission. He informed her about Totapuri.
Mother, the naked sannyasi wants to teach me vedantic meditation shall I learn it?
Yes My boy, it is I who have brought him here to teach you.
TO BE CONTINUED....

# ESSENTIAL ETHICS OF THE TAMILS

# Ulaga neethi உலக நீதி

## Universal words of wisdom

### Tamil Text: Verse No 11

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏது இங்குஎன்னில் சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன்தன் கூலி
சகலகலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகாநோவு தனைத் தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ ஏமன் தானே.

### Transliteration


Anchu Peir Cooliyai-k-Kaikkolla Veindaam
Athu Eithu Inku Ennil Solla-k-Keilaay
Thanchamudan Vannaan Naavithan than Cooli
Sakala Kalai Oathuviththa Vaaththiyaar Cooli
Vanchamattra Nanchu Aruththa Matuththuvachi Cooli
Maha Noavu Thanai-th-theerththa Matuththuvan Cooli
In Solludan Ivar Cooli Kodaatha Peitai
Eeitheithu Seyvaano Eeiman Thaanay

## Translation

There are five people whose wages you should not grudge. If you ask who those five are let me state. The dues owed to the washerman; fees due to the hairdresser; the tuition fees owed to the teacher; the fees payable to the midwife who delivered the baby removing the umbilical cord and the medical fees of the physician who cured you of serious ailments. We know not how the God of death will treat the people who pay not such fees cheerfully and gratefully.

S. SRISKANDARAJAH

# பொங்கலோ பொங்கல்




ஆண்டுதோறும் நாம் பல்வேறு பண்டிகைகளைக் கொண்டாடுகின்றோம். அவற்றுள் தைப் பொங்கல் தனிச் சிறப்புப் பெற்ற ஒன்றாகும். இதனைத் தைத்திருநாள், உழவர் திருநாள், தைப்பொங்கல் என்றெல்லாம் அழைப்பர். உழவுத் தொழிலுக்கு உதவி செய்த சூரியபகவானிற்கு நன்றி செலுத்துவதற்காகத் தைப் பொங்கல், தமிழ் தைமாதத்தின் முதலாம் நாளிற் கொண்டாடப்படுகின்றது. ஆண்டுதோறும் அயராது உழைத்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்பவன் உழவனே. அவனது தொழிலுக்கும் முயற்சிக்கும் மழையும் வெயிலும் மிக முக்கியம். இதனைத் தருபவன் சூரியனே. எனவேதான் உழவன் சூரியனைத் தெய்வமாக மதித்துப் போற்றுகின்றான். சூரியபகவானிற்கு தை முதல்நாளில் பொங்கலிட்டு தன் நன்றியைத் தெரிவிக்கின்றான். மக்கள் தமது இல்லங்களை முதல் நாளே சுத்தம் செய்வார்கள். தைப் பொங்கல் அன்று நித்திரை விட்டெழுந்து நீராடி புத்தாடை அணிந்து முற்றத்தில் சாணத்தால் அழகாக மெழுகிக் கோலமிடுவார்கள். நிறை குடம் வைத்து விளக்கில் தீபம் ஏற்றுவர். நீர் நிறைந்த புதுப்பானையில் இஞ்சி, இலை, மஞ்சள்இலை கட்டி விபூதி பூசி அடுப்பில் வைப்பர். பானையில் பாலும் இட்டு அடுப்பை நன்கு எரிப்பர். பால் நன்றாகப் பொங்கி வழியும். பின் அரிசியை கழுவி அந்தப் பானையில் இடுவர். அரிசி வெந்து வந்ததும் சர்க்கரை பால் என்பன மேலும் இடுவர். பொங்கி நன்கு வந்ததும் முற்றத்தில் வெற்றிலை , பாக்கு, பழம், கரும்பு, இளநீர், பால் என்பன சூரியபகவானிற்கு படைப்பார்கள். தேங்காய் உடைந்து கற்பூர தீபம் ஏற்றி மலர்கள் தூவி சூரிய பகவானிற்கு நன்றி கூறி வணக்கம் செலுத்துவார்கள். வணக்கம் செலுத்தி முடிந்ததும் பொங்கலை அயலவர்களுக்கும் பகிர்ந்தளித்து உண்டு மகிழ்வர். இதனையே தைப் பொங்கற் திருநாள் என்று அழைப்போம்.

**Brent Asian Academy School**

**வி. அமிர்தவர்ஜினி**

## தைப் பொங்கற் திருநாள்



நால்வர் தமிழ்க் கலை நிலையம்
செல்வி கீர்த்திகா நற்குணதயாளன்

---

## IS THERE A GOD?

One of the world's most rhetorical question is, " Is there a God?" There are many theories but no proof to say there is God. There are also many other questions which lay unanswered but they have either scientific theories or peoples' beliefs to support them. These questions include, " How was the world created?", "Do miracles actually happen? Or are they a coincidence?" , "If there is a God, why does he let people suffer?" , "Are the religious stories true? Or are they simply made up?", " If no one has seen God, how do we have pictures of him?" Etc.

People who do not believe in God say that the world was created by the "Big Bang" or other theories. Those who believe in God say that something or someone more superior than anything on this earth must have caused the cause that resulted in the universe being created if it was created.

" If miracles did occur, why don't they occur any more?" The meaning of the word 'miracle' has changed over the years. This is mostly due to the advancement of science.

People in the world today are suffering. " If there is a God, why would He let them suffer?" People who believe in God would argue that we need good and bad to learn from and to lead a good life. We need to be aware of others who are suffering so that we can help them.

Any one can make up a story about God and every one will believe it but then over the years these stories have never changed and all the people know the exact story without any variations.

We have pictures of God but how we do know that this is what he looks like? Any one can draw a picture of a God and say this is Sivaperuman. But a person who truly believes in God does not need a picture

(Thouhgts of Children from New Malden: Compiled by Gowri Mahandran)

# கலசம் சஞ்சிகையூடு ஒரு கருத்துப் பரிமாறல்

-தேவலோகேஸ்வர சர்மா-

சைவ சமயம் இலண்டனில் ஆலவிருட்சமாய் வேரூன்ற வேண்டும் எனும் ஆன்மீக அவாக் கொண்டு தன்னாலான இனிய நற்பணியாற்றிவரும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தொண்டுகளில் மிக முக்கிய பணியைக் கலசம் என்ற சஞ்சிகை சிறப்பாக ஆற்றி வருவது பாராட்டத்தக்கது. கலசம் என்ற பெயருக்கேற்பப் பூரண கும்பமாய்த் தனது ஆன்மீக தீர்த்தத்தைத் தெளித்து யாவரையும் சிலிர்த்தெழ வைக்கிறது. இப்படியான நல்ல பணிகளுக்கிடையே வேறு சில சஞ்சிகைகள் ஆன்மீக சஞ்சிகை என்ற பெயரில் எமது சமய கலாசார விழுமியங்களைத் தங்களுடைய வசதிக்கு மாற்றி அமைக்கக்கூடிய வகையிற் கட்டுரைகள் பிரசுரித்திருப்பது வேதனை தரும் விடயமாகும். இதைக் கலசம் சஞ்சிகைக்கு அதன் வாசகர் என்ற நிலையிற் தெரியப்படுத்துவது நமது கடமையாகும். மெய்கண்டார் ஆதீனத்தால் வெளியிடப்படும் காலாண்டு இதழான "சைவ உலகம்" 14 ஆவது இதழிற் திரு. சாம்பசிவனார் அவர்கள் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்றும், அந்தண குலத்தினரை இழிவு படுத்தியும் "ஆதிசைவ அந்தணர்க்கு ஓர் அறை கூவல்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள்.

தமிழை இழிவு படுத்துகின்றோம் என்றும், இன்று தமிழில் வழிபாடு சைவத் திருக் கோவில்களில் இல்லாத அவல நிலை என்றும் அதிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்தக் காலகட்டத்தில் யார் தமிழை இழிவு படுத்தினார்கள்? "திராவிட ஸ்தோத்திரம்" என்று கூறப்படும் தேவார பஞ்ச புராணங்கள் எந்த மொழியில் ஆலயங்களில் ஓதப்படுகின்றன? "வடமொழி மேலானது, தமிழ் தாழ்ந்தது" என்று யாரும் எப்போதும் பறை சாற்றவில்லை. இறைவன் எப்படி எமக்குப் பெரியவனாக இருக்கின்றானோ அதே போல் அந்த இறைவனோடு சம்பந்தமுடைய சமஸ்கிருத மொழியை தேவ பாஷை என்று கூறுகின்றோமே தவிர வேறு எந்தவிதமான உயர்வு தாழ்வும் இல்லை. இதை கட்டுரையாளர் நன்கு உணரவேண்டும்.

சம்பந்தப்பெருமான் தோன்றியது "தமிழ் மொழி வழக்கு வெற்றி கொள்ளவும் வடமொழிவழக்குத் தோல்வியுறவுமே" என்றும் கட்டுரையிற் குறிப்பிட்டிருந்தார். எத்தனையோ அற்புதங்கள் நிகழ்த்திய சம்பந்தப் பெருமான் நினைத்திருந்தால் அவருடைய காலத்திலேயே சமஸ்கிருத மொழியை இல்லாமற் செய்து தமிழில் அர்ச்சனையை ஆலயங்களில் உருவாக்கி இருக்கலாந்தானே. ஏன் அவர் அப்படிச் செய்யவில்லை? சமய குரவர் நால்வரும் எப்போதாவது எந்தச் சந்தர்ப்பத்திலாவது வடமொழியைத் தாழ்த்தி தமிழை உயர்த்திக் கூறியிருக்கிறார்களா? இல்லையே! அந்த வேத ஆகமங்களின் சாரத்தையே அடியார்களும் அறியும் பொருட்டுத் தேவார திருவாசகங்களையும் புராணங்களையும் தமிழில் வகுத்துப் பக்தர்களையும் வழிபட வைத்தனர்.

எமது சமய நெறி கிரியை விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் தத்துவமான நெறிமுறைகள் உண்டு. பலவிதமான முறைகளை ஆகமம் கூறியிருக்கின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நெறிமுறைகளையும் வகுத்திருக்கின்றது. ஆகம நெறிப்படி நாம் வழிபாடு செய்கின்றபோது அதற்கு முக்கியத்துவமான வேதம் ஓதப்படுகின்றது. அந்த வேத ஒலி பீக்ஷார சக்தியுடைய சமஸ்கிருத மொழியிலேயே உண்டு. சிறு ஊசித்துண்டைக் காந்தம் எப்படிக் கவர்ந்திழுக்கின்றதோ அதேபோல் இந்த சமஸ்கிருத மொழியில் உள்ள சப்தம் ஸ்வர ஒலியுடன் திருமூர்த்தங்களின் மேனியிற் சாநித்தியமாகப் படர்கின்றது. அந்த சக்தி யந்திர, விம்ப, கும்ப, ஸ்தாபனங்களாக பூரணத்துவமாக இறைவனோடு ஐக்கியமாகின்றது. இதன் பிரகாரம் இறைவன் திருவருள் மெருகு கூடுகின்றது. தமிழில் ஒரு "க" என்றால், சமஸ்கிருத மொழியில் நான்கு "க"

உள்ளன. அந்த நான்கு "க" உச்சரிப்பும் வித்தியாசமான சப்தங்களுடன் ஓதப்படுவனவாகும். மேலும் சமயகுரவர் நால்வரும் தங்கள் திருமுறைகளில் வேதங்கள்பற்றி அழகாகக் கூறியிருக்கின்றார்கள். ஞானசம்பந்தர் தமது பதிகத்தில், "கழிசூழ் தில்லையிற் பொய்யாமறை பாடல் புரிந்தான்", "எக்காலத்திலும் பொய்மையடையாத வேதபாடல்களை விரும்பினான்". என்று போற்றுகின்றார். வேதத்தின் மெய்மைச் சிறப்பைப் "பொய்யாமறை" என உணர்த்துகின்றார். இதையே மாணிக்கவாசகர் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று கூறுகின்றார். சுந்தரர், "முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்" என்று கூறுவார். திருநாவுக்கரசர் அழகாகக் கூறுகின்றார், "அரியானை, அந்தணர் தம் சிந்தையானை, அருமறையின் அகத்தானை" என்று. இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் கட்டுரையாளரோ வேதமொழியான சமஸ்கிருதத்தைப் பகட்டுமொழி என்றும் அந்தணர்களை இழிவுபடுத்தியும் எழுதியிருக்கின்றார்.

அதுமட்டுமல்லாது மற்றைய மதங்களையும் உதாரணங் காட்டுகின்றார். முஸ்லீம்களின் குறானும் சரி, கிறிஸ்தவரின் பைபிளும் சரி, எமது பகவத்கீதையிற் சொல்லியிருக்கின்ற கருத்தைத்தான் பறைசாற்றுகின்றன. சிங்கள பௌத்த மதத்தையும் உதாரணங் காட்டியிருந்தார். ஒரு சாதாரண மனிதன் ஞானியாகி, நல்வழி காட்டுவதே புத்தசாசனம் என்கின்ற பௌத்தமதக் கோட்பாடு. ஆதியும் அந்தமும் இல்லாத எமது சைவசமயப் பாரம்பரியங்களை மிகவும் தரக்குறைவாக நினைக்கும் கட்டுரையாளரை என்னவென்று சொல்வது? இதிற் புதுமை என்னவென்றால் சாம்பசிவனார் என்ற பெயரில் வரும் 'சாம' என்ற சொல்லும் 'சிவ' என்ற சொல்லும் தமிழில் எந்த இலக்கண இலக்கியங்களில் உண்டு? அவருடைய பெயரையே வடமொழியில் வைத்துக் கொண்டு தமிழ் மொழி பற்றி எழுதுகின்றார். எமது கலாசாரங்களில் ஆரியமும் தமிழும் ஒன்றறக் கலந்துவிட்டன. அதைப் பிரித்தெடுப்பது யாராலும் முடியாத காரியம். இறுதியாகக் கட்டுரையாளர் அந்தண குலத்தையே இழிவுபடுத்தும் வகையில்,

பணவருவாய் இல்லையே என்ற நிலையில், மனம் மாறித் தமிழில் அர்ச்சனை செய்ய முன்வருவர் என்று குறிப்பிட்டு இருந்தார். "யக்ஞோபவீதம்" என்ற பூணூல் தரித்து உண்மைப்பொருளாம் வேதத்தைக் கற்று என்றும் பக்தர்களுக்காகவே இறைவனை இறைஞ்சும் எந்த ஒரு அந்தணரும் அந்நிலைக்கு வரமாட்டார்கள் என்று கட்டுரையாளர்கள் உணரவேண்டும். சில வேளை அவர் அறிந்த அந்தணர்கள் யாரேனும் அப்படி நடந்தார்களோ என்பது தெரியவில்லை. ஆனால் இவருடைய கூற்று அந்தணகுலத்தினர் அனைவரையும் இழிவுபடுத்துவதாக அமைந்திருந்தமையால் இதனை நான் இங்கு குறிப்பிடவேண்டி வந்துவிட்டது.

அடியார்கள் கூட்டுச் சேர்ந்து வழிபடும்போது பக்திமார்க்கமான பூசையில் தமிழில் அர்ச்சித்து வழிபடலாமே தவிர, ஆலயம் அமைத்து, இயந்திர விம்ப தாபனஞ்செய்து நித்திய நைமித்திய கிரியைகள் ஆற்றும் எந்த ஆலயத்திலும் தமிழில் அர்ச்சனை இறைவன் முன் நின்று செய்வது ஏற்க முடியாததொன்றாகும். மந்திரகேனம், கிரியாகேனம், பக்தகேனம் என்று சொல்லப்படுகின்ற மூன்றுவிதமான நிலையில் தான் இறைவனின் பூரணத்துவத்தை நாம் திரிகரண சுத்தியுடன் ஆலயத்தில் அடைகின்றோம் என்பதை தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என முழங்குபவர்கள் உணர்ந்துகொண்டாற் சரி. இப்படி வருகின்ற கட்டுரைகளுக்குக் கலசமும் நல்ல விளக்கம் கொடுக்கவேண்டுமென்று கலசத்தின் வாசகர் என்ற முறையில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

## சமய நம்பிக்கைகள்

**பரந்த மனப்பான்மை**

எல்லாச் சமயங்களும் இறைவனிடம் இட்டுச் செல்லும். ஆறுகள் யாவும் சமுத்திரத்தையே அடைவதுபோல எந்தச் சமயத்தைப் பின் பற்றினாலும் இறுதியில் சச்சிதானந்தத்தை அடைய முடியும்

தொகுப்பு : கே. இராசேந்திரம்

# எப்போதோ முடிந்த காரியம்

-பதுமன்-

அன்று வழமைக்கு மாறாக அதிகாலை 4 மணிக்கே கலாநிதி அவர்கள் யோகர் சுவாமியின் கொழும்புத்துறை ஆசிரமத்திற்கு வந்து விட்டார். கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கை, கால் கழுவி ஆசிரமத்திற்குள் நுழைந்தார். சுவாமியின் உரத்த சிரிப்பொலி கலாநிதியைக் கலக்கியது. அமைதியாக வணக்கத்தைத் தெரிவித்து சுவாமிகளின் கை அசைவைப் பின்பற்றி அருகிற் போய் உட்கார்ந்தார். அன்று ஆசிரமத்திற்கு முதலில் வந்தவர் கலாநிதிதான். விளக்கொன்று சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது. மீண்டும் அமைதி நிலவியது.

குருவையே பரீட்சிக்கவெனத் தான் வந்திருந்த உள் நோக்கம் சுவாமிக்குத் தெரிந்த விடயம் என்பதில் அவருக்கு இப்பொழுது சந்தேகமில்லை. நம்பிக்கைக்கு முன்னாடி உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினால் எழும் கேள்விகள் தானே. எனவே கலக்கமடையாமல் அமைதியில் ஆழ்ந்தார்.

சென்ற வாரம் அதே இடத்தில் அவர் அமர்ந்திருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. அன்று அழுதவர் இன்று ஏன் சிரிக்கின்றார்.

"நற்சிந்தனை" என்ற தொகுப்பில் யோகர் சுவாமி தனது குரு செல்லப்பரின் உபதேசத்தைக் குறிக்கும் ஒரு பாடல் மனத்தை உலுப்புகின்றது.

**"தேரடியில் தேசிகனைச் சென்று தரிசித்தேன்**
**தேரடா உள் என்றான் தெரிந்து"**

யாழ்ப்பாணத்து நல்லூர் முருகன் ஆலயத் தேரடியிற் சந்தித்த குருவின் கட்டளைப்படி உள் தேர்வு பெற்றுத் தெளிந்த ஞானமுடையவரா இந்த யோகர் சுவாமி? அப்படியாயின் இதோ இன்னம் சில நிமிடங்களில் தெரிந்து கொள்ளலாம் என்றவாறு சிந்தனைகளை ஓடவிட்டு அச்சிந்தனைகளுக்கும் சாட்சியாக இருக்கின்றார் கலாநிதி. அதிகாலையில் 4 மைல் தூரம் நடந்து வந்த களைப்பு மாறிக் கால்கள் ஓய்வடைகின்றன.

சென்ற வாரம் காலை 5 மணியளவிற் சுவாமியிடம் பெரும் பக்தியும் மதிப்பும் உடைய ஒரு பெரியவர் அங்கு வந்தார். அவரும் கொழும்புத்துறையில் ஆசிரமத்திற்கு அண்மையில் வசிப்பவர். வாசலில் வந்தவுடன் யோகர் சுவாமியைப் பார்த்து கை கூப்பியபடி "சுவாமி! என்னுடைய கடைசி மகளின் கலியாணம் எல்லாம் நல்லபடியாக நிறைவேற்றிவிட்டேன். என்னுடைய வேலை எல்லாம் முடிஞ்சுது. சுவாமியைப் பார்த்துச் சொல்லிப் போட்டுப் போகலாம் என்று வந்தனான்" என்றார். சுவாமியும் அவருக்கு ஆசீர்வாதம் பண்ணி அனுப்பிவிட்டு எங்கோ பார்த்தபடி இருக்கின்றார்.

பின் கண்கலங்கியபடி கலாநிதி அவர்களைப் பார்த்து "அடே! அவன் என்ன சொல்லிப்போட்டுப் போறான் என்று கவனித்தாயா? தன்னுடைய வேலை எல்லாம் முடிஞ்சுதாம், அடுத்த கிழமை சரியாய் இந்த நேரம் போகப்போகிறான்" என்று கண்கலங்கியபடி சொன்னார்.

கலாநிதி அவர்களின் மனதிற் சலனம் ஏற்படுகின்றது. துறவு என்ற திடசங்கல்பம் பூண்டவர்கள் எதற்கும் கலங்கமாட்டார்கள். யோகர் சுவாமி அவர்கள் தெளிந்த ஞானமுடையவரா? என்ற வினாவைத் துளிர்க்கச் செய்தது அன்றைய அந்தக் காட்சி என்றாலும் யோகர் சுவாமி முக்காலமும் (இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம்) தெரிந்தவரா? கண்ணீர்விட்டுக் கலங்குபவர் எப்படி ஞானியாக இருக்கமுடியும்? இவற்றைப் பரீட்சித்துப் பார்த்துவிடும் உறுதியோடுதான் இன்று மூன்றுமணிக்கே எழுந்து மிக வேகமாக நடந்து வந்தவர் கலாநிதி .

இன்று ஆசிரமத்திற்கு மேலும் சிலர் வந்து சேர்ந்து நமச்சிவாயப்பதிகம் பாடி முடித்து விட்டார்கள். யோகர் சுவாமி கலாநிதி அவர்களைப் பார்த்து உரத்துச் சிரித்தபடி எப்பவோ முடிந்த காரியம் என்றபோது தூரத்தில் அழுகுரல் ஒலிகேட்டது. சென்ற வாரம் அதே தினத்திற் சுவாமியிடம் விடைபெற்றுச் சென்ற பெரியார் காலமாகிவிட்டார் என்ற செய்தியை ஒருவர் ஓடிவந்து தெரிவித்தார்.

ஆம் அன்று அன்பு மலை கரைந்தது. இன்று ஞானச் சுடர் ஒளிர்ந்து சிரித்தது. யோகர் சுவாமியின் சிரிப்பொலி சிரித்துப் புரமெரித்த சிவனின் பெருஞ்சிரிப்பின் எதிரொலி போலிருந்தது. கலாநிதியின் சந்தேகமலை பொடிப் பொடியாக நொருங்கி நீறாகியது.


முழுதும் உண்மை.

யாமறியோம். ஒருபொல்லாப்புமில்லை.

தமிழில் வழிபாடு செய்வதற்கான சில ஆலோசனைகள்

# தமிழ் வழிபாடு


### தூபம் காட்டும்போது.....



சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்.
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தே னடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே

–அப்பர்–

### நைவேத்தியம் செய்யும்போது........



ஆலந்தான் உகந்து அமுது
செய்தானை
ஆதியை அமரர்தொழு தேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

–சுந்தரர்–

### அடுக்கு விளக்குக் காட்டும் போது...



சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனேபால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப் பெருந்துறையில்
நிறை மலர்க்குருந்த மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதந்துவே என்ற ருளாயே

–மாணிக்கவாசகர்–

### குடவிளக்குகள் காட்டும் போது



ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந்
தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

–திருவிசைப்பா–

### ஐந்து விளக்குகள் காட்டும்போது

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு
ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்
சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா
மணிவிளக்கே

–திருமூலர்.

### மூன்றுவிளக்குள் காட்டும் போது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

–அப்பர்–

### கற்பூரம் காட்டும்போது....

கற்பனை கடந்த சோதி கருணையே
உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச்
சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம்
பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல்
போற்றி போற்றி

–சேக்கிழார்–

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச்
சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் –
பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா.

–ஸ்ரீகுரு ஞானசம்பந்தர்–

### அம்பிகைக்குக் கற்பூரம் காட்டும் போது.

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல்
போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி
கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை
எடுத்தாண்ட
அற்கயற் கண் எம் பிராட்டி
அரும்புமிள நகை போற்றி ஆரண நூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி

–பரஞ்சோதி முனிவர்

நன்றி : ஆன்மீகம்

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

## வியாழ மாற்றம்

நவக்கிரகங்களில் ஒருவரான வியாழன் எனப்படும் குருபகவான் 23-12-96 அன்று தனுராசியிலிருந்து மகரராசிக்குப் பிரவேசம் செய்துள்ளார். இந்த மாற்றத்திற் சிலருக்கு மிக நல்ல பலன்களும் பலருக்குச் சற்றுச் சிரமமான பலன்களும் நடைபெறலாம். அதோடு குருபகவான் ஒரு ராசியிற் கிட்டத்தட்ட ஓராண்டு காலம் தங்குவதில் 1997 ஆம் ஆண்டுப் பலனாகவும் இதை ஏற்கலாம்.

### மேஷம்

சென்ற ஆண்டில் இடைஇடையே கஷ்டங்களைச் சந்தித்தாலும் முடிவில் வெற்றியடைந்த நீங்கள் குருமாற்றத்தினால் இறுக்கமான சூழ்நிலையைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் அமைதிக் குறைவும் நினைத்ததை நடத்தமுடியாமல் எரிச்சலும் ஏற்படும். பிரயாணத்தினால் உடல்நிலை பாதிப்பும் பண விரயமும் உண்டு. உத்தியோக உயர்விற் தடங்கல் ஏற்படும். ஆண்டின் இறுதியில் திடீர் அதிர்ஷ்டத்திற்கான வாய்ப்பு உண்டு.

### ரிஷபம்

சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட்டுக் கெட்ட பெயரைச் சம்பாதித்த தாங்கள் வியாழ மாற்றத்தினால் நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். சொத்து, ஆபரணம், வீடு சேர்க்கை உண்டு. உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் பயப்படத் தேவையில்லை. பிரயாணத்தினால் பணச் செலவும் அலுப்பும் ஏற்படும். குடும்பத்தில் அமைதி காணப்படும். படிப்பு விடயங்களில் மிக கவனம் தேவை.

### மிதுனம்

வேடிக்கையாகவும் கலகலப்போடும் சென்ற ஆண்டைப் போக்கிய தங்களுக்குச் சோதனைகள் காத்திருக்கின்றன. காரிய வெற்றிகள் கடைசி நிமிடத்திற் கை விடும். படிப்பிற் தடங்கலும் திருமண விஷயங்களில் ஏமாற்றமும் உண்டு. பணவரவு சரளமாக இருந்தாலும் நல்ல சமயத்திற் பணப் பிரசினை உண்டு. பொது விவகாரங்களிலும் ஒதுங்கி இருப்பது நல்லது. உத்தியோக உயர்வு உண்டு. குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

### கடகம்

வெகு நாட்கள் கழித்து வாழ்வில் வசந்தம் வீசத் தொடங்குகிறது. பிரசினைகளைச் சமாளித்து வெற்றி அடைவீர்கள். புதிய நண்பர்களால் உதவிகள் உண்டு. பொது வாழ்விற் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும். காதல் விவகாரங்களிற் பிரசினை ஏற்பட்டு முடிவில் நல்லபடியாக முடியும். பிரயாணங்களால் உடல் நலப் பாதிப்பும் பணவிரயமும் ஏற்படும். வழக்கு விவகாரங்களிற் கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளினாற் பிரசினை ஏற்படும்.

### சிம்மம்

மனதில் பட்டதை நேரிடையாகப் பேசித் துணிந்து காரிய மாற்றும் நீங்கள் நிதானித்துச் செயற் படவேண்டிய காலமிது. 6 இல் வந்திருக்கும் குருவோடு 8இல் உள்ள சனியும் சேர்ந்து உங்கள் பொறுமையைச் சோதிப்பார்கள். உடல் நிலை பாதிப்பும் பொருள் இழப்பும் வழக்கிற் தோல்வியும் ஏற்படும். குடும்பத்திற் பிரசினை இருந்து வரும். பிரயாணத்தில் சந்தோஷமும் மன அமைதியும் உண்டு. பொதுச்சேவைகளில் மன வருத்தம் ஏற்படும்.

### கன்னி

அறிவிற் சிறந்த உங்களுக்கு அதிர்ஷ்டமான காலமிது. படிப்பில் முன்னேற்றமும் குடும்பத்தில் நிம்மதியும் காணப்படும். திருமண விடயங்கள் விரைவாகக் கண்கூடும். ஆயினும் மறைமுக எதிர்ப்புகள் உண்டு. தொழில் துறை சிறந்து விளங்கும். பிரயாணங்களால் அலைச்சலும் பணச் செலவும் ஏற்பட்டாலும் மன அமைதி கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். வழக்கு விவகாரங்களிற் கவனம் தேவை.

## துலாம்

இன்னல்களிற் சிக்கித் தவிக்கின்ற உங்களுக்குச் சற்று ஆறுதல் கிடைக்கும். ஆயினும் முழுவதும் தீர்ந்த பாடில்லை. நண்பர்களின் உதவிகளை நன்கு பயன் படுத்துவது நல்லது. பெண்கள் விவகாரங்களிலும் எச்சரிக்கை தேவை. தக்க சமயத்தில் எதிர்பாராத வகையில் உதவிகள் பணவரவுகள் கிடைக்கும். கல்வித்துறையிற் சற்று மந்தம் இருக்கும். குடும்பத்திற் திடீர்க் குழப்பம் தோன்றி மறையும். பொதுவாக எதிலும் கவனமாக இருப்பது நல்லது.

## விருச்சிகம்

தொடங்கிய காரியங்கள் பாதியில் நிற்கும். கவனத்தை ஒரு நிலைப் படுத்துவது நல்லது. புதிய நண்பர்கள் சேருவார்கள். உடல் நிலை பரவாயில்லை. வாகன பிரயாணங்களில் எச்சரிக்கை தேவை. படிப்பிற் தேர்ச்சி உண்டு. திருமணப் பேச்சுகளால் குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படும். புதிய உத்தியோக உயர்வு உண்டு. சமூக சேவைகளால் மன நிம்மதி ஏற்படும். சகோதரங்களின் உதவி கிடைக்கும். எதையும் தீர ஆலோசித்துச் செய்வது நல்லது.

## தனுசு

தங்கள் ராசியை விட்டுப் புறப்பட்ட குருபகவான் அதிர்ஷ்டத்தையும் கொஞ்சம் தந்திருக்கிறார்.. குடும்பத்தில் அமைதி நிலவும். சமூகசேவை சிறக்கும். பிரயாணங்களாற் தொந்தரவு உண்டு. எதிர்பார்த்த கடிதங்கள் வந்து சேரும். பிள்ளைகளுக்குப் படிப்பிற் கவனம் குறையும். பொருளாதார வசதி பரவாயில்லை. உறவினர்களிடம் கவனமாக இருக்கவும். உத்தியோகத்தில் பெருமை கிடைக்கும். திருமண விடயங்களிற் தடங்கல் உண்டு. பிறருக்கு உதவும் காரியங்களிற் கெட்ட பெயர் ஏற்படும்.

## மகரம்

உங்கள் ராசிக்கு வந்திருக்கின்ற குருபகவானாற் கஷ்டம்தான் அதிகம். வெளி உலகிற்குப் பாராட்டு கிடைத்தாலும் மனதிற்கு அமைதி கிடையாது. தொழில் துறை மோசமாக விளங்கும். ஆயினும் காரிய வெற்றி உண்டு. நீதிமன்ற விவகாரங்களில் வெல்வீர்கள். உடல் நலம் பாதிக்கப்படும். உங்கள் வாயினாலேயே கெடுவீர்கள். ஆண்டு மத்தியில் திடீர் அதிர்ஷ்ட பண வரவு உண்டு. பிரயாணங்களாற் பிரசினை அதிகரிக்கும். புதிதாகத் தொடங்குவது எதையும் தவிர்ப்பது நல்லது. மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

## கும்பம்

சென்ற ஆண்டு பொருளாதார வசதி பரவாயில்லை என்றாலும் பிரசினை அதிகமாக இருந்தது போல இந்த ஆண்டும் சற்று நிம்மதி குறைவு தான். அதிகமாகக் கோபப்படுவீர்கள். குடும்பத்திலும் பிரசினைகள் உண்டாகலாம். தொழில் துறையிலும் உத்தியோகத்திலும் முன்னேற்றம் தடைப்படும். நண்பர்களால் உதவி உண்டு. பிரயாணங்களால் மனச் சாந்தி ஏற்படும். சமூக சேவைகளால் பாராட்டும் பெருமையும் கிடைக்கும். பிள்ளைகளால் தொந்தரவு உண்டு. வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறப் பலனுண்டு.

## மீனம்

இது நாள் வரை உத்தியோகத்தினால் குடும்பத்தில் நிலவிவந்த இறுக்கமான சூழ்நிலை மாறி மகிழ்ச்சி ஏற்படும். சிறுவர்கள் படிப்பில் மந்தமாக இருப்பார்கள். பொருளாதார விடயங்களில் மேன்மை உண்டு. வெகு நாட்களாகத் தள்ளிப் போடப்பட்டு வந்த காரியங்கள் வேகமாக நிறைவேறும். திருமண விடயங்களும் நினைத்தபடி முடியும். பிரயாணங்களிற் கவனம் தேவை. சிலருக்கு நீதிமன்ற வழக்குகளால் தொந்தரவு உண்டு. பணவரவு தாராளமாக இருப்பதால் சிரமங்கள் தெரியாது. புதிய நட்புகளைத் தவிர்ப்பது நல்லது.

## NIRALA

தரமான இனிப்புணவுகளைத் தரும்
ஒரே ஸ்தாபனம்

We are proud to serve the community
Caterers for Weddings & Parties 100%
Pure Vegetarian Sweets & Savouries

بہترین مٹھائیوں کا لاجواب مرکز
شادی بیاہ اور پارٹیوں کے لئے جانا پہچانا نام

**NIRALA SWEETS LONDON**
316 HIGH STREET NORTH, MANOR PARK,
LONDON E12 6SA
**TEL: 0181 548 1303/ 0181 548 1350**
**FAX 0181 548 1363**
2ND BRANCH : 225 HOE STREET, WALTHAMSTOW E17

பொங்கலோ பொங்கலென்று
பொங்குக உள்ளமெல்லாம்

## POPAT STORE

**Dealers of**
Stainless Steel, Aluminium, Brass, Copper, Mild Steel Kitchen ware, Giftware, Cosmetics, Bangles, Immitation Jewellery, Indian Books, Magazines, Paintings, Wooden Artware, Electrical Appliances, Audio Cassetts, Marriage and Pooja Articles

138 Ealing Road
Wembley, Middlesex
London
Tel: 0181 902 2543
Fax: 0181 903 9613

158, Ealing Road
Wembley, Middlesex
London
Tel: 0181 903 6397


## VARSHI'S SUPER STORE



மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

FIRST AND THE BEST TAMIL SHOP IN NEW MALDEN


**Speciality in Srilankan , Indian and English Products under one roof**



**Open Daily 8.00am - 11.00pm**

லண்டனில் உங்கள் வீட்டுத் தேவைக ளுக்கான அனைத்துப் பொருட்களையும் ஒடியோ , சீடி, வீடியோக்களையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். தேசிய லாட்டரிச் சீட்டுகளும் விற்பனை யாகின்றன.

**99 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY KT3 4LR**
**TEL: 0181 336 0061**




**அணங்கினர் ஆயத்தினை இறையருள் பெற்ற மகளிரும்
இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால்
அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும்
அதில் சிறந்து விளங்கிய பாடல்களும் சிறுகுறிப்புகளும்
அலங்கரிக்கும்.**

**—சாலினி—**

# காரைக்காலம்மையார்

கப்பல்கள் செறிந்த காரைக்காலில் தரும நெறியில் வாழும் வணிகர்குலத் தலைவனான தனதத்தனுக்கு மகளாகப் புனிதவதியார் பிறந்து அழகுள்ள பிள்ளையாக வளர்ந்து விளையாடும் பொழுதிலும் சிவநாமம் சொல்லி வாழ்ந்தார். வீட்டுக்கு வரும் சிவனடியவர்களை அன்புடன் வணங்கி வரவேற்றார். பருவம் அடைந்தபோது இவரது அழகைக் கேள்வியுற்ற நீதிபதி என்னும் வணிகன் தனது மகன் பரமதத்தனுக்கு மணம்பேசி அறிஞர்களை அவர்களிடம் அனுப்ப அவர்கள் தனதத்தனிடம் கூற, கேட்ட அவர் குலம் குணம் விசாரித்த பின் இசைவு கூறினார். கேட்டவர்கள் சென்று அறிவிக்க நீதிபதி மகிழ்ந்து தனது மைந்தனை மாப்பிள்ளைக் கோலம் புனைவித்து அழைத்து வந்தான். தனதத்தன் மங்கலம் பெருகத் தன்மகளை அலங்கரித்து அவனுக்கு வதுவை செய்து கொடுத்தான். இவள் தனக்கு ஒரு மகளாதலால் கண வனூரிற் குடியிருக்கவிட மனமில்லாது தனது அரண் மனைக்கருகில் ஒரு அழகிய அரண்மனையாக்கி அதில் இருக்கச் செய்தான்.

பரமதத்தன் முன்னமே பணக்காரனாக இருந்தாலும் தான் முயன்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்தில் வணிகவினையில் ஈடுபட்டான். ஒரு நாள் தனது வினையில் புறப்பட்டுப் போகும் போது இவனிடம் தங்கள் குறையை நிறைவாக்க வந்தவர்கள் வழியில் இவனைக்

கண்டு தங்கள் குறையைக் கூற இவன் அவர்கள் குறையை முடித்தான். வந்தவர்களில் ஒருவர் மகிழ்ச்சியில் தான் கொண்டுவந்த இரு மாங்கனிகளைக் கொடுக்க அதை வாங்கித் தனது மனைவியிடம் கொடுக்கும்படி கூற அவரும் அதைக் கொடுத்துச் சென்றார்.

அன்று புனிதவதியார் பகல் சோறு ஆக்கிக் கறி சமைக்க ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். அப்போது ஒரு வயது வந்த சிவனடியார் பெரும்பசியில் வர அவரை வரவேற்ற அம்மை அவரது பசியை உணர்ந்து சோற்றுடன் அம்மாங்கனிகளில் ஒன்றை அரிந்து கறியாகக் கொடுக்க உண்டு வாழ்த்தி அந்த அடியவர் சென்றார்.

தனது கருமம் முடிந்து வீடு திரும்பிய பரமதத்தன் நீராடி உணவு உண்ண வந்தான். சோற்றை நல்ல கறியுடன் கொடுத்த மனைவியார் அவர் விரும்புவார் என்று இருந்த அந்த ஒரு மாங்கனியையும் அரிந்து கொடுக்க அதை உண்ட அவன் மிக இனிதாக இருந்தமையால் இன்னும் ஒன்று உண்டல்லவா? அதையுந் தாரும் எனக் கணவன் விரும்பிக் கேட்கும் போது இல்லையெனச் சொல்ல மனமில்லாத குண முடையவராதலால் அது இருப்பது போலக் காட்டி எடுக்க வீட்டுட் சென்று சிவனை நினைந்து வணங்கிச் சிவனருளால் ஒரு மாங்கனி கையில்வர அதைக் கொடுக்க உண்ட கணவன் இது முன் மாங்கனியன்று. மூவு லகிலும் பெறமுடியாது. அத்துணை மதுரமாக இருக்கிறது, பெற்றது எப்படி என்று வியப்புடன் வினவ, கடவுள் தந்ததைக் கூறக்கூடாது என்ற நினைவும் கணவனுக்குப் பொய் சொல்லக் கூடாதென்ற கற்பு நெறியும் மனதிற் தோன்ற என்ன செய்வதென்று தெரியாது கலங்கிய அம்மை கணவனே பெரிதென்ற காரணத்தால் உண்மையைக் கூறக்கேட்ட தலைவன் அதை நம்பக் கூடிய பக்குவ நிலையற்றவனாக இருந்தமையால் கடவுள் தந்ததென்றால் இன்னும் ஒன்று அழைத்துத் தா என்றான்.

அம்மை அந்த இடத்தில் நின்றே கடவுளை வேண்ட ஒரு மாங்கனி கிடைக்க அதைக் கொடுத்தார். தன் கையால் வாங்கப்பட்ட மாங்கனி மறையப் பரமதத்தன் பயந்தான். தனது மனைவி ஒரு தெய்வப் பெண் என நம்பினான். அவரை மனைவியாக வைத்திருப்பது தனக்குத் தகுதி இல்லை என எண்ணி அவருடன் உடற்தொடர்பு இல்லாது அவரை விட்டுப் பிரிய எண்ணினான்.

எண்ணிய அவன் வேறு நாட்டில் வியாபாரஞ் செய்யப்போவதாகக் கூறி மரக்கலத்திற் பண்டங்களை ஏற்றிச் சென்று விற்றுப் பெரும்பணத்துடன் பாண்டிநாடு வந்து பெரும் வணிகர் இருக்கும் ஊரில் தானும் ஒரு பெரு வணிகனாக இருக்கும்போது ஓர் அழகிய பெண்ணை மணந்து ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றுத் தான் கடவுளாக மதித்த அம்மையின் பெயராக புனிதவதியார் என்னும் பெயரையே பிள்ளைக்கு இட்டுப் புனிதவதியாரை வணங்கியபடி இருந்தான்.

இந்த விவரமெல்லாம் உண்மை என அறிந்த புனிதவதியாரின் உறவினர் இவரிடமே புனிதவதியாரைக் கொண்டுபோய் விடக் கருதி அம்மையாரைக் கொண்டு சென்று அவனது மாளிகைக்குச் சிறிது தூரத்தில் அம்மையைச் சிவிகையில் நின்றும் இறக்கி ஒரு சிலரை அனுப்பிப் பரமதத்தனுக்கு அறிவித்தனர். அறிந்த பரமதத்தன் பக்தி உணர்வுடன் தான் பின் முடித்த மனைவியுடனும் பெற்ற மகளுடனும் ஓடிவந்து அம்மையின் காலடியில் விழுந்து வணங்கக் கண்ட அம்மை வெட்கமடைந்து சிறிது ஒதுங்க உறவினர் இது என்னப்பா செய்கிறாய் இவர் உனது மனைவி அல்லவா? என்றனர்.

இதைக் கேட்ட பரமதத்தன் கூறுகின்றான். "அன்பர்களே! கேளுங்கள். இவர் தெய்வம். யான் பின் விவாகம் செய்த பெண் இவள். இவரைத் தெய்வமாகக் கருதி இவரை எந்தநாளும் நினைக்க வேண்டும் என்ற கருத்தில் பெற்ற இப்பெண் குழந்தைக்கு இவரது பெயராகிய புனிதவதியார் என்று பெயர் வைத்துள்ளேன். நீங்களும் இவர் தெய்வமெனக் கருதி இவரை வணங்குங்கள்" என்றான்.

இதைக் கேட்ட உறவினர் அதிசயித்து நிற்க, அம்மை மேலே பார்த்தபடி கடவுளே! உனது கொள்கை இது. இவனுக்காக யான் இதுவரை தாங்கிய எனது உடம்பு தேய்ந்து பேய்வடிவு தரவேண்டும் என்று வேண்டிப் பெற்றார். உறவினர் பக்தியுடன் அம்மையை வணங்கிச் செல்லப் பரமதத்தனும் மனைவியும் பிள்ளையும் அம்மையை வணங்கிச் சென்றனர்.

பேய்வடிவு பெற்ற அம்மை ஞானம் பெற்று இரட்டைமணி அந்தாதி சிவனைப் பற்றிப் பாடியபின் கைலையிற் சிவனை வணங்கப் புறப்பட்டார். வழியிற் கண்டவர்கள் பேய் வருகிறதடா என்று கூறிக்கொண்டு பயந்தோட இதை அறிந்த அம்மை சிவன் என்னை அறிந்தாற்போதும் இவர்கள் எப்படி என்னை அழைத்தாலும் நான் ஒன்றும் எண்ணேன் என்று நினைத்துக்கொண்டு கைலையை அடைந்து அதனடியைத் தொட்டு வணங்கியபின், கைலையிற் காலால் நடப்பது பொருத்தமல்ல என்று

தலையால் நடந்து விரைந்து மேலே ஏறிச் செல்ல உமையம்மையார் கண்டு, "நாதா ஒரு எலும்பும் தோலுமான பெண் தலையால் நடந்து வருகிறார். அவர் யார்?" என்று பணிந்து கேட்க, சிவன் கூறுகிறார், "வரும் இவள் நம்மைப் பாதுகாக்கும் அம்மை. இப்பெருமை சேர்ந்த வடிவினை விரும்பிப் பெற்றாள்" என்று கூறிக் கொண்டிருக்கப் புனிதவதியாரும் சிவனுக்கு அண்மையில் வர அம்மா வருக என்று சிவன் அழைக்க புனிதவதியார் அப்பா என்று வணங்கினார் அன்று முதல் புனிதவதியார் காரைக்கால் அம்மை என்னும் பெயரைப் பெற்றார்.

இதன்பின் சிவன் காரைக்கால் அம்மையைப் பார்த்து, "என்ன வேண்டுகிறாய்?" என்று வினவ, அம்மை பின் வருமாறு வேண்டுகிறார்,

இறவாத இன்ப அன்பு வேண்டும். பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பிருந்தால் உங்களை மறவாமை வேண்டும் நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உங்கள் திருவடியின் கீழ் இருக்கவேண்டும். இப்படி வேண்ட, சிவனும் அவ்வண்ணமே தந்தேன் என்றருள, காரைக்கால் அம்மையும் அவ்வண்ணம் என்றும் இருக்கின்றார்.

## சமய நம்பிக்கை

மோட்சத்தை பெற கட்டுப்பாடான
நல்லொழுக்கமுள்ள
உளத்தூய்மையுள்ள
உள்ளம் வேண்டும்.
புறத்தே இறைவனை காணமுடியாது.
உள்ளே நோக்கவேண்டும்.
அன்பர்தம் சிந்தையில் உறைவோனே
அரகர சிவ சிவ மறையோனே
தேடிக் கொண்டேன் - திரு
மாலொடு நான் முகனுந்
தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

தொகுப்பு : கே. இராஜேந்திரம்

AKILAN ENTERPRISES LTD
அகிலன் எண்டர்பிரைசஸ்



மிருதங்கம்
வீணை
வயலின்
ஆர்மோனியம்

தெய்வச் சிலைகள்
தெய்வ அலங்காரப் பொருட்கள்
பட்டுத் துணிகள்
பீடங்கள்

திருமணப்
பொருட்கள்
பட்டுச்சேலை
பட்டு வேட்டி

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 10 மணியிலிருந்து மாலை 10 மணி வரை
திறந்திருக்கும்

சமய நூல்கள்
இலக்கிய நூல்கள்
சஞ்சிகைகள்

274 High Street North
Manor Park
London E12 6SA
Tel: 0181 548 0033
Fax: 0181 548 0300

தமிழ்த்
திரைப்படங்கள்
தரமான
Audio, Video
CD க்கள்

# திருக்கோயில்

தமிழரசி

"ஆலயந்தோறும் அரன் எனத் தொழுமே" என்கிறது சிவஞானபோதம். சைவசமயம் திருக்கோயிலையும் கடவுளாகப் பாவித்து வணங்கும் பெருமை உடையது. அப்பர் தமது திருத்தாண்டகம் ஒன்றில்

'பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிப்பொழில் சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆவக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே

இவ்வாறு கோயிலின் பெயர்களைப் பாகு படுத்திக் காட்டுகின்றார். இந்தத் திருத்தாண்டகத்தைப் படிக்கும் போது கோயில்களில் இத்தனை வகைகள் இருக்கின்றனவா? என எண்ணத்தோன்றுகின்றது. தனக்கே பலவிதமான வீடுகளைக் கட்டிய மனிதன் தான் வணங்கும் தெய்வத்திற்குப் பலவகைப்பட்ட கோயில்களைக் கட்டாமலா இருப்பான்? எனவே இத்தகைய கோயில்கள் இருக்கின்றனவா எனத் தேடிய பொழுது கிடைத்த சில ஆதாரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

திருக்கோயில்
இடம்: திருக்கீழ்வேளூர்
குருண்டவார் குழற்சடையுடைக் குழகனை
அழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறையவர் தொழும் பெருந்
திருக்கோயில் எம்பெருமானை

-சம்பந்தர் தேவாரம்-

ஆலக்கோயில்
இடம்-திருப்புள்ளமங்கை
....அருமறைப் புலனுறுஞ் சிந்தையார்
புள்ளமங்கைப் பதிக் குலவும்
ஆலந்துறைக் கோயிலைக் குறுகினார்.
-பெரியபுராணம், சேக்கிழார்
(ஆலமரம் தலவிருட்சம்)

மணிக்கோயில்
இடம்- திருமருகல்
.........நான் மறையோர் வழிபாடு செய்ய
மாமருவும் மணிக்கோயில் மேய
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
-சம்பந்தர் தேவாரம்-

இளங்கோயில்
இடம்- திருமியச்சூர்
....இருக்கொதி மறையவர்கள்
வழிபட்டேத்தும் இளங்கோயில்
அப்பர் தேவாரம்

(திருப்பணி செய்வதற்காகத் தற்காலிகமாகக் கட்டப்படும் கோயிலை இளங்கோயில் என அழைத்தற்கான கல்வெட்டுக்கள் கூறுகின்றன.)

கொகுடிக்கோயில்
இடம்: திருக்கருப்பறியலூர்.
..கையிலாலெரியோம்பி மறைவளர்க்கு
மந்தணர்தங் கருப்பறியலூர்க்
கொய்யுலா மலர்ச் சோலைக் குயில்கூவ
மயிலாலுங் கொகுடிக்கோயில்
-சுந்தரர் தேவாரம்
(கொகுடி ஒருவகை முல்லைக்கொடி)

ஞாழற்கோயில்
இடம்: திருப்பனங்காட்டூர்
.....மாதவி புன்னை அசோகமும் அரவிந்த
மல்லிகைப் பைந்தண்
ஞாழல்கள் சூழ்புறவார் பனங்காட்டூர்
-சம்பந்தர் தேவாரம்
(ஞாழல்-குங்குமம், மயிர்க்கொன்றை-சங்கு புஷ்பம், பொன்னாவரை போன்ற பூமரங்கள்)

**கரக்கோயில்**
இடம்: திருக்கடம்பூர்

**..தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
–அப்பர் தேவாரம்
**(கரம்–கை, இந்திரன் கையால் அகழ்ந்த கோயில்)**

**பெருங்கோயில்**
இடம்: திருக்குடவாயில்
**குடவாயில் தனில் உயரும் பெருங்கோயில் உயர்ந்தவனே**
–சம்பந்தர் தேவாரம்

மனிதன் இறைவனுக்குக் கட்டிய பெருங்கோயிலை விட இறைவன் தான் வாழ்வதற்கு உகந்த இடமாக இறைவனே கட்டிய பெருங்கோயிலைப் பற்றி திருமூலர் திருமந்திரமாகத் தருகின்றார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிர்ந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே**

எனவே பல விதமான திருக்கோயில்களிற் சென்று இறைவனை வழிபடுவது போல அங்கே காணும் பரம்பொருளை நம் உடலினுள்ளே கண்டு மனோலயம் பெறவேண்டும்.

# தேவாரம்

செல்வ மல்கிய செல்வ பராய்த் துறை
செல்வ மேசிதை யாத னாம்
செல்வ ஞானசம் பந்தன்நற் செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பு வேன்

# அருள் விருந்து

**ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்**

மன அடக்கத்துக்கு அடையாளம் நாவடக்கம்
உண்மை பேசுதல் யாகங்களிலும் மேலானது
பதவி மோகம் இல்லாதவனை உலகம் அடிபணிகிறது
அச்சம் உள்ள இடத்தில் குறைபாடு உண்டு
அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்
தந்தையை இகழ்பவன் தன்னையே இகழ்பவனாவான்
மௌனமாய் இருத்தல் தெய்வத்தின் பாஷை
தூய அன்பு ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை
ஆசை உள்ளளவும் அல்லல்களும் உண்டு
அன்பு ஓங்கும்போது அச்சம் அகலுகிறது
ஒழுக்கத்தின் அழகு வாழ்வு முழுவதிலும் இருக்கிறது
துக்கம் தீய செயலிலிருந்து தோன்றுகிறது
பொருளாசை மனதை அழுக்குப்படுத்துகிறது
மனதை மாற்றி அமைக்க வல்லது எண்ணம்
நம்பிக்கை உள்ளவனுக்கு ஞானம் விரைவில் ஓங்குகிறது
மனசாட்சியைச் சார்ந்திருத்தல் மிக மேலானது
இறைவனின் ஆணையைக் கேட்பவன் உலகை விலக்கியவன்
மனதை அடக்கப் பழகியவன் சான்றோனாகிறான்
இனிமை என்பது இறைவனின் அறிகுறி
உறுதியான நம்பிக்கை உயிரை ஓம்புகிறது
மெய்யறிவு மேலிட, பேரின்பம் உண்டாகிறது
பேரறிவுள்ளவன் பொறை உடையவனாகிறான்
அகமகிழ்ச்சி உள்ளத்துக்கு இனிமை தருகிறது
பிரார்த்தனையில் விரும்பவேண்டியவை ஞானம், பக்தி
உழைப்பினாலன்றி இன்பத்தைப் பெறமுடியாது

தொகுப்பு: ராணி

# சைவ முன்னேற்றச் சங்கம் தரும் செய்திகள்




நால்வர் தமிழ்க் கலை நிலையம்

□ நால்வர் தமிழ்க் கலை நிலையம்

- □ கிழக்கு லண்டனில் மாணவ சமுதாயத்திற்கு கலை கலாசாரத்தைச் சிறப்பாகப் புகட்டி வரும் தமிழ்ப் பாடசாலை.
- □ பாட்டு, பரத நாட்டியம், மிருதங்கம், தபேலா, வீணை ஆகிய கலை வகுப்புகள் நடைபெறுகின்றன.

□ மாணவர் தமிழ் வாசகம் என்னும் பாடப்புத்தகம் ஆரம்ப நிலைப் பிள்ளைகளுக்கு மிகக்குறைந்த விலையில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்புத்தகம் தேவையானவர்கள் விவரங்களுக்கு தலைமையாசிரியர் (0181 924 8492) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## விநாயகர் விரத வழிபாடு

விநாயகர் விரத வழிபாடு டிசம்பர் மாதம் 14 ஆந் திகதி திரு கனகசபை அவர்களது இல்லத்திற் சிறப்பாக நடைபெற்றது. சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் திரு சிறீரங்கன் அவர்களது பிள்ளையார் பெருமை என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் நடை பெற்றது.


## கலசம் சந்தாப் படிவம்

**New/ Renewal**

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன் இத்துடன் அதற்கான (பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:.............................................................

Address: ..................................................

..................................................

(காசோலைகள் SMS(UK) என்ற பெயருக்கு எழுதப்படுதல் வேண்டும்)

Subscription for 2 Years
UK - £10.00 only
Europe - £14.00 0nly
Others - £22.00 only

KUMARANS

# KUMARANS
# குமரன்ஸ்
## தமிழ்க்கடை
## KUMARAN BOOK CENTRE

அரசியல் பொருளாதார புத்தகங்களோடு பெருமளவிலான
ஈழ, தமிழக பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும்
திருவாசகம், திருப்புகழ், திருமுறைகள்
பண்டைத் தமிழ் இலக்கியங்கள்
ஆகியனவும் நியாயமான விலையில் கிடைக்கும்

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**532-536 FOREST ROAD,**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4NB**
**TEL : 0181 925 7720**
**FAX : 0181 925 7721**

வாடிக்கையாளர்களுக்கு
எமது பொங்கல்
வாழ்த்துக்கள்

# MARKANDAN & CO

## solicitors

*Empowered to Administer Oaths*

TAMIL HOUSE
720, ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

## M. MARKANDAN LLB

* ALL ASPECTS OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING * LITIGATION* ALL COURTS CIVIL/ CRIMINAL* LANDLORDS/ TENANT MATTERS
* MATRIMONIAL* POLICE STATION ADVICE* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

**LEGAL AID**

**WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP**

**TEL : 0181 514 8188**
**FAX : 0181 514 8303**



நியாய விலையில்
லண்டனில் சமயநூல்கள் சோதிட நூல்கள்

# குரு புத்தகசாலை
# GURU BOOKS

இராமாயணம்
மகாபாரதம்
பகவத்கீதை

ஸ்ரீமத் சங்கரரின்
தெய்வத்தின் குரல்
கிருபானந்தவாரியாரின்
அரிய படைப்புகள்

சிலப்பதிகாரம்
மணிமேகலை
திருவாசகம்
பெரிய புராணம்

இன்னும் சிறந்த நல்ல சமய தத்துவ நூல்கள்

106, Drummond Street, London NW1 2 HN, UK
**Tel : 0171 388 3939**

# Sri Kannan Stores

## EDMONTON

நயம்

நம்பிக்கை

நாணயம்



உங்களுக்குத்
தேவையான
தமிழ், ஆங்கில
சஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில
வீடியோ, ஓடியோக்கள்
மற்றும்
இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட
உணவுப்
பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை
மலிவு விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கொள்வனவு
செய்வதற்கு
நம்பிக்கையோடு
அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்

**249 Fore street**
**Edmonton**
**London**
**N18 2TY**
**Tel/Fax 081 884 4979,**
**081 345 6317**

25 புது கடை
பலாலி வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
இலங்கை

# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, Off Warple Way, Acton London W3 0RQ
Tel : 0181 740 8379 / 0181 749 0595
Fax: 0181 740 4229 Telex: 929657 Glenca G

* SHIPPING
* AIRFREIGHT
* TRAVEL

UNACCOMPANIED BAGGAGE
PERSONAL EFFECTS
HOUSEHOLD GOODS
VEHICLES
MACHINERY ETC.

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**



ATOL 74395

Main Agents for Air Lanka

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும்
உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த
சேவையினைப் பெறுவதற்கும்
சிறந்த ஸ்தாபனம்

வாடிக்கையாளர்களுக்கு
எம் மனம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துகள்

ALL YOUR GOODS GO TO OUR
BONDED WAREHOUSE IN COLOMBO

நியாய விலைக்கு இலண்டனில்
ஒரே தங்கமாளிகை

# Raju Pattni & Son

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஒரே தங்க மாளிகை

We specialise in 22CT. Gold & Diamond Jewellery
Tax Free For Overseas Visitors

தமிழ் மக்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்ற, நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.



அழகான வண்ண வண்ண உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான தாலிக்கொடிகள், நெக்கிலஸ்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணங்களில் அமைந்த அட்டியல் வகைகள், பதக்கம் சங்கிலிகள், அழகான டிசைன்களில் கண்களைப் பறிக்கும் தங்க வளையல்கள், சங்கிலிகள் இவை மாத்திரமா? பென்ரன்கள், தோடுகள், இரத்தினக்கற்கள் பதித்த மோதிரங்கள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரேயொரு நகை மாளிகை

**ராஜு பட்னி அன் சன்**

பொன்னுருக்குவதற்கு ஏற்ற
வசதிகளுமுண்டு

## ராஜு பட்னி அன் சன்

58 - 60 Ealing Road, Wembley, Middx HA0 4TQ
Tel: 0181 903 6677, 0181 902 0577, Fax: 0181 903 4887

£2000 க்கு மேல் நகை வாங்கும் உங்களுக்கு £100 நன்கொடைச் சீட்டை இலவசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள்
ராஜு பட்னி அன் சன் நகை மாளிகையினர்

**இன்றே குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்.**

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14. 1. 97 அன்று வெளியிடப்பட்டது.